Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

சிறியதோ, பெரியதோ, எந்த அளவுகளிலான
பொதிகள், கடிதங்களை
எந்த நாட்டிற்கும்
எந்தநேரமும்
துரிதமாகவும் குறைந்த
கட்டணத்தில் அனுப்பிட
FedEx Express
திருமுருகன் கொம் நெற்
259, கே.கே.எஸ் றோட், யாழ்ப்பாணம். (Opposite All Ceylon Distributors) Tel - 021 222 7835 Fax - 021 222 7836
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம் (பலநோக்கு கூ.ச.முன்பாக) Tel - 021 222 7560 Fax - 021 222 7310

மலர்:03 திருவள்ளுவர் ஆண்டு: 2036 சித்திரை- 20 ஆம் நாள் ஹிஜ்ரி 1428 ற-அவ்வல் 23 (03.05.2005) செவ்வாய்க்கிழமை இதழ்:216







# மாமனிதர் சிவராம் புகழுடல் மட்டக்களப்பில் நல்லடக்கம்!



(மட்டக்களப்பு)

கொழும்பில் கடத்திச்செல்லப்பட்டு படுகொலை செய்யப்பட்ட பிரபல ஊடகவியலாளரும் அரசியல் மற்றும் இராணுவ ஆய்வாளருமான மாமனிதர் சிவராமின் புகழுடல் நேற்று மாலை மட்டக்களப்பு ஆலையடிச் சோலை மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

கொழும்பிலிருந்து நேற்றுமுன்தினம் இரவு மட்டக்களப்புக்கு எடுத்து வரப்பட்ட புகழுடல் நேற்றுக்காலை மட்டக்களப்பை வந்தடைந்தது. அன்னாரின் மனைவியின் இல்லத்தில் அஞ்சலிக்காக புகழுடல் வைக்கப்பட்டிருந்தபோது பெருந்திரளான மக்கள், ஊடகவியலாளர்கள், புத்திஜீவிகள், அரசியல்வாதிகளென பல்வேறு தரப்பைச் சேர்ந்தவர்களும் திரண்டுவந்த தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தினர்.

இதனையடுத்து முற்பகல் 11 மணிக்கு (12 ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய - இலங்கை வெளியுறவுச் செயலர்கள் கொழும்பில் நேற்று முக்கிய கலந்துரையாடல்!

(கொழும்பு)

இந்திய - இலங்கை வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகளுக்கிடையிலான உயர்மட்டப் பேச்சுவார்த்தை நேற்று கொழும்பில் நடைபெற்றது.

நேற்றைய பேச்சுக்களில் இரண்டு நாடுகளுக்கும் இடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்பு மற்றும் சுனாமி அனர்த் தத்தின் பின்னரான மீள்கட்டுமானப் பணிகள் குறித்தும் ஆராயப்பட்டது.

இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் சியாம் சரண் தலைமையிலான குழுவினருடன் இலங்கை வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பாலிககார தலைமையிலான குழுவினர் இந்தப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர்.

நேற்றைய சந்திப்பில் இரண்டு நாடுகளுக்கும் இடையில் உத்தேசிக்கப்பட்டுள்ள பாதுகாப்பு ஒத்துழைப்பு (12 ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய வெளியுறவுச் செயலரை தமிழ்க் கூட்டமைப்பினர் சந்திப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் சியாம் சரனுடன் தமிழ் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சந்திப்பொன்றை நடத்தியுள்ளனர்.

நேற்று கொழும்பில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் தமிழ் கூட்டமைப்பின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன், மாவை சேனாதிராஜா, கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சுரேஷ் பிரேமச்சந்திரன், ரவிராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளருடன் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் நிருபமாராவ், (12 ஆம் பக்கம் பார்க்க)

# பொதுக்கட்டமைப்பு தாமதமாவதற்கு உதவி வழங்கும் நாடுகள் அதிருப்தி!

(கொழும்பு)

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளை வழங்கும் வகையில் விடுதலைப் புலிகளுடன் இணைந்து பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்துவதில் அரசாங்கம் இழுத்தடிப்பை மேற்கொள்வது குறித்து உதவி வழங்கும் நாடுகளிடையே அதிருப்தி நிலை ஏற்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பொதுக் கட்டமைப்பை உருவாக்குவது தொடர்பாக நோர்வே முன்வைத்த திட்டத்தை விடுதலைப் புலிகள் முழுமையாக ஏற்றுக்கொண்டுள்ள நிலையிலும், அரசாங்கத் தரப்பு திட்டமிட்ட ரீதியில் காலத்தைக் கடத்திவருகிறது.

இந்த நிலையில் எதிர்வரும் 16 ஆம், 17 ஆம் திகதிகளில் கண்டியில் நடைபெறவுள்ள உதவி வழங்கும் மாநாட்டில் கலந்துகொள்ளவிருந்த அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி பில் கிளின்டன் தனது விஜயத்தை ரத்துச்செய்துள்ளார். இதற்குக் காரணம் பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்துவது குறித்து அரசாங்கத்துக்குள் தோன்றியுள்ள முரண்பாடுகளே காரணமாகும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில் பொதுக் (12 ஆம் பக்கம் பார்க்க)

## கேணல் சொர்ணம் கிளிநொச்சி வருகை!




(கிளிநொச்சி)

திருகோணமலை மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் சொர்ணம் நேற்றுக்காலை கிளிநொச்சி வந்தடைந்தார்.

நேற்றுக்காலை 9 மணியளவில் விமானப்படைக்குச் சொந்தமான ஹெலிகொப்டர் மூலம் கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தை வந்தடைந்த கேணல் (12 ஆம் பக்கம் பார்க்க)

## சுனாமி உதவிகளை வழங்கும் உரிமை அரசாங்கத்துக்கு மாத்திரமே உண்டாம்!

### ஜே.வி.பி. தலைவர் சோமவன்ச கூறுகின்றார்

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரண மற்றும் உதவிப் பொருட்களை வழங்குவதற்கான அதிகாரம் - மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கத்துக்கு மாத்திரமே உள்ளதென ஜே.வி.யின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் கொழும்பில் நடைபெற்ற தமது கட்சியின் மேதினக் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் -

பொதுக்கட்டமைப்பு நாட்டின் இறைமைய பாதிக்காதெனக் கூறப்படுவதை நான் ஏற்றுக்கொள்ளவில்லை. சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிதியுதவியை வழங்கும் அதிகாரம் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட அரசாங்கத்துக்கு மாத்திரமே உண்டு. இதனை விடுத்து பயங்கரவாத - பிற்போக்குவாத அமைப்பொன்றுடன் அரசாங்கம் தொடர்புவைத்திருப்பதை ஜே.வி.பி. முழுமையாக எதிர்க்கிறது.

நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த விடுதலைப் புலிகள் பிடித்த வேலையில்லாத மனிதர்தான் சொல்ஹெய்ம். (12 ஆம் பக்கம் பார்க்க)

**பேரன்பிற்குரிய வாசகர்களுக்கு**

வணக்கம்

பத்திரிகை அச்சிடும் தாள் மற்றும் ஏனைய மூலப் பொருட்கள் எரிபொருள் ஆகியவற்றின் விலை கடந்த சில மாதங்களாக அதிகரித்து வந்துள்ளது. இந்நிலையில் நமது ஈழநாடு பத்திரிகையின் விலையை ஒரு ரூபாவால் அதிகரிப்பது தவிர்க்கமுடியாததாக உள்ளது.

எனவே, இம்மாதம் 5 ஆம் திகதிமுதல் நமது ஈழநாடு பத்திரிகையின் விலை 8 ரூபாவாக இருக்கும் என அறியத் தருகின்றோம்.

இச்சிறு விலையுயர்வுக்கான நியாயத்தன்மையைப் புரிந்துகொண்டு வாசகப் பெருமக்கள் நமது ஈழநாட்டின் வளர்ச்சிக்கு தொடர்ந்தும் தங்கள் அன்பான ஆதரவை வழங்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்

**நிர்வாகம் - நமது ஈழநாடு**

## பயங்கரவாதத்திற்கு ஆதரவாக வை.கோ.செயற்படவில்லை!

### பொடா மறு ஆய்வுக்குழு தெரிவிப்பு

பயங்கரவாதத்திற்கு வை.கோ. ஆதரவு அளிக்கவில்லையென பொடா மறு ஆய்வுக்குழு தெரிவித்துள்ளது. தமிழக அரசினால் வை. கோ. மீது தாக்கல் செய்யப்பட்ட வழக்கை விசாரித்த மறு ஆய்வுக் குழுவே இவ்வாறு தெரிவித்துள்ளது. இது குறித்து அந்த ஆய்வுக்குழு மேலும் தெரிவித்துள்ளதாவது -

தடை செய்யப்பட்ட இயக்கமொன்றுக்கு வாய்மொழி மூலமாக ஆதரவு அளிப்பது வன்முறையைத் தூண்டுவதாக அமையாது. இவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்ட பின்னர் இவர்கள் எந்தவித பயங்கரவாதத்திலும் ஈடுபடவில்லை. எனவே வாய்மொழி மூலமாக இவர்கள் கூறிய கருத்துக்கள் குற்றமாகாது.

இதேவேளை 21 வருடங்களுக்கு முன்னர் வன்முறையைத் தூண்டும் வகையில் வை.கோ.செயற்பட்டார் என்ற வழக்கிலிருந்தும் வை.கோ. நிரபராதி என நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

## அரசு - புலிகள் காட்டும் அக்கறை மூலமே போர்நிறுத்த ஒப்பந்தம் நிலைத்து நிற்கும்!

### கண்காணிப்புக்குழுத் தலைவர் ஹக்ரப் ஹொக்லன்ட்

(கொழும்பு)

அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் காட்டும் அதிக அக்கறை மூலமே போர் நிறுத்த உடன்படிக்கை நிலைத்து நிற்குமென கண்காணிப்புக் குழுத் தலைவர் ஹக்ரப் ஹொக்லன்ட் தெரிவித்துள்ளார்.

செய்தி நிறுவனமொன்றுக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் இவ் வாறு தெரிவித்தார்.

அந்தப் பேட்டியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

இரண்டு தரப்பினரும் போர்நிறுத்த உடன்படிக்கையில் காட்டிவரும் அக்கறை காரணமாக மீண்டு மொரு யுத்தத்திற்குச் செல்லவேண்டிய தேவையிருப்பதாக நான் கருதவில்லை.

தற்போது போர்நிறுத்த உடன்படிக்கை நடைமுறையிலுள் ளது. சில சந்தர்ப்பங்களில் மனிதப் படுகொலைகள் இடம்பெறுவதாக அறிவிக்கப்படுகின்றது. குறிப்பிட்ட தரப்பினரே அர்ப்பணிப்பிற்கு மத்தியிலும் போர்நிறுத்த (12 ஆம் பக்கம் பார்க்க)

# மாமனிதர் சிவராமுக்கு தேனகத்தில் அஞ்சலி!








# மாமனிதர் சிவராமின் இறுதி நிகழ்வின்போது...!






## மே 7 முதல்

பாடநூல் வெளியீட்டிலும் நாடளாவிய விற்பனை மேம்படுத்தலிலும்
கொழும்பில் முன்னணி வகிக்கும் லங்கா புத்தகசாலை அனுசரணையுடன்
யாழ்.பல்கலைக்கழக வணிக மாணவர் மன்றத்தின்

## மாபெரும் புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும்

அனைத்துத் தரப்பினருக்கும் ஏற்ற உள்நாட்டு, வெளிநாட்டு (ஆங்கில, தமிழ்) பாடநூல்களும் அகராதிகள், கவிதைகள், சிறுகதைகள், சமய இலக்கியங்கள், மருத்துவ நூல்கள் மற்றும் பல

இடம் : யாழ்.பல்கலைக்கழக வணிகத்துறை விரிவுரை மண்டபம்
காலம்: 2005 மே மாதம் 7 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரை
நேரம் : காலை 9.00 மணி முதல் மாலை 6.00 மணிவரை (புதிய நேரம்)
(வார இறுதி நாட்களும் விடுமுறை நாட்களும் உட்பட)

சிறப்பு விலைக் கழிவு

தொடர்புகளுக்கு:-
தலைவர், வணிக மாணவர் மன்றம்,
யாழ் - பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.
(சி/4105)


# தேசியமட்ட சதுரங்கப் போட்டி 5 ஆம் திகதி ஆரம்பமாகிறது!

(யாழ்ப்பாணம்)

இளையோருக்கான தேசியமட்ட சதுரங்கச் சுற்றுப்போட்டி எதிர்வரும் 5ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதாக யாழ்.சதுரங்கச் சம்மேளனச் செயலாளர் தெரிவிக்கின்றார்.

இதற்கமைய 8, 10, 12 வயது ஆண், பெண் பிரிவைச் சேர்ந்த சதுரங்கப் போட்டியாளர்களுக்கு எதிர்வரும் 5ஆம் திகதி கேகாலை மகா வித்தியாலயத்தில் காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளதுடன் 14, 16, 18 வயது ஆண், பெண் சதுரங்கப் போட்டியாளர்களுக்கு எதிர்வரும் 12ஆம் திகதி கேகாலை மகாவித்தியாலயத்தில் காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. எனவே மேற்படி போட்டியில் கலந்துகொள்ளவுள்ள மாணவர்கள் அவர்களின் பெற்றோருக்கான விசேட கலந்துரையாடல் இன்று யாழ்.இந்து ஆரம்ப பாடசாலையில் மாலை 4.00 மணிக்கு நடைபெறவுள்ளது. இந்தக் கலந்துரையாடலில் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களின் பெற்றோர் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களின் விபரம் வருமாறு -

8 வயது ஆண்கள் -

1ஆம் இடம் - அலோசியஸ் அயின்ஸ்ரின், 2ஆம் இடம் - ரி.தனுசியன், 3ஆம் இடம் - பி.ஜெயசீலன்.

8 வயது பெண் -

1ஆம் இடம் - மணிசேகரம் தாரணி.

10 வயது ஆண் -

1ஆம் இடம் - இராமச்சந்திரன் சாம் அபிஷேக், 2ஆம் இடம் - சிறி கஜேந்திரா கஜானன், 3ஆம் இடம் - இளங்குமரன் பிரசாந்தன்.

10 வயது பெண் -

1ஆம் இடம் - சுந்தரலிங்கம் பிரியங்கா, 2ஆம் இடம் - பாஸ்கரன் மாதங்கி, 3ஆம் இடம் - குகநாதன் குணசிங்கா.

12 வயது ஆண் -

1ஆம் இடம் - நகுலநாதன் லவலோஜன், 2ஆம் இடம் - சிவகுமார் கேமலாதன், 3ஆம் இடம் - இளங்குமரன் பார்த்தீபன், 4ஆம் இடம் - ஜெயமாருதி, 5ஆம் இடம் - எம்.கஜீபன்.

12 வயது பெண் -

1ஆம் இடம் - ஞானசேகரம் திவ்வியா, 2ஆம் இடம் - ஜெயபாலசிங்கம் டிலுஷா, 3ஆம் இடம் - மேரி யோசேப் சாந்தமெறின்.

14 வயது ஆண் -

1ஆம் இடம் - சத்தியசீலன் கோபிகாந்தன், 2ஆம் இடம் - சோதிநாதன் விஷ்ணுச்சந்தன், 3ஆம் இடம் - கணநாதபிள்ளை ஏககாந்தன், 4ஆம் இடம் - பி.றஜீவன், 5ஆம் அடம் - ஜெ.ஜெயநேரியோ.

14 வயது பெண்கள் -

1ஆம் இடம் - நகுலநாதன் கௌசிகா, 2ஆம் இடம் - கனகலிங்கம் திவ்வியா, 3ஆம் இடம் - பாலசுந்தரம் ஆரணி.

16 வயது ஆண்கள் -

1ஆம் இடம் - சிவகுருநாதன் வல்லவக்குமரன், 2ஆம் இடம் - கனக சபை எழில்வேல், 3ஆம் இடம் - றொபேட் மரியதாஸ் ஜெனுசான்.

16 வயது பெண்கள் -

1ஆம் இடம் - புஸ்பராஜா சுகன்யா, 2ஆம் இடம் - ரவீந்திரன் பவதாரணி, 3ஆம் இடம் - பேதுறுப்பிள்ளை பிறேமகங்கா.

18 வயது ஆண்கள் -

1ஆம் இடம் - எஸ்.சுலக்சன், 2ஆம் இடம் - முருகையா குகதீபன், 3ஆம் இடம் பா.ஜெயராம்.

18 வயது பெண்கள் -

1ஆம் இடம் - சிவகுருநாதன் வித்தியாரணி, 2ஆம் இடம் - சிவசக்திவேல் இந்துஜா, 3ஆம் இடம் - நடராசபிள்ளை சுதாயினி.

# மெய்வன்மைப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.வலய பாடசாலைகளுக்கிடையிலான மெய்வன்மைப் போட்டி யாழ்.பல்கலைக்கழக மைதானத்தில் எதிர்வரும் 4ஆம், 5 ஆம், 6 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. இந்தப் போட்டிகள் காலை 8.30 மணி தொடக்கம் 4.30 மணிவரை நடைபெறவுள்ளன.


ராஜா யாழ்ப்பாணம்
பரத்,
கோபிகா
மற்றும் பலர் நடித்த
4 ஸ்டூடன்ஸ்
(சி-3980)
பு.நே: 10.30, 2.30, 6.30, 9.30

நாகம்ஸ் சுன்னாகம்
ரஜினிகாந், நயன்தாரா, பிரபு, ஜோதிகா, வடிவேல், நாசர் நடிப்பில்
3 வது ஜனத்திரள் வாரமாக

சந்திரமுகி
(C/3979)
காட்சி நேரம் :- (பு.நே.) 11.00, 3.00,7.00, 10.00

மனோகரா யாழ்ப்பாணம்
3 வது வெற்றி வாரமாக
இளைய தளபதி விஜய், போய்ஸ் புகழ் ஹரிணி நடித்த

சச்சின்
காட்சி நேரம் : (பு.நே) 10.30, 2.30, 5.30, 9.30

# சமாதான முயற்சிக்கு உதவ இந்தியா தயாராக உள்ளது!

## இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சிகளுக்கு உதவி செய்ய இந்தியா தயாராக உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இலங்கைக்கு விஜயம் செய்துள்ள இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் சியாம் சரண் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சிகளிலும், பொருளாதார அபிவிருத்திப் பணிகளிலும் உதவி செய்ய இந்தியா தயாராக இருப்பதாக சியாம் சரண் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் பாதுகாப்பு விடயங்களிலும் இந்தியா முழுமையான ஒத்துழைப்பை வழங்கும்.

இதுவரை இலங்கையின் சமாதான முயற்சிகளில் தலையிடாத கொள்கையைக் கொண்டிருந்த இந்தியா - தனது நிலைப்பாட்டை மாற்றியுள்ளதையே அந்த அறிக்கை எடுத்துக்காட்டுவதாக அவதானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் நடைபெறுவதற்கு முன்பாக இந்தியத் தரப்பால் வெளியிடப்பட்டுள்ள இந்த அறிக்கை பல்வேறு சந்தேகங்களைத் தோற்றுவித்துள்ளது.

இலங்கையில் அதிகரித்துவரும் சர்வதேசத் தலையீடுகள் இந்திய பாதுகாப்பு நலன்களுக்கு அச்சுறுத்தலாக அமையும் என்பதால் இந்தியா தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டிருக்கலாம்.

ஏற்கனவே 1987 இல் இலங்கை-இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் விடயம் தொடர்பாக அப்போது இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளராக இருந்த ஜே.என்.டிக்ஸிற் முக்கிய பங்களிப்பை ஆற்றியமை நினைவுகூரத்தக்கது.

அவ்வாறான ஒரு நடவடிக்கைக்குத் தயாராகும் வகையிலேயே, இந்தியாவின் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் சியாம் சரண் இலங்கைக்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (01)

## சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசின் நிதி நிலைமையைப் பொறுத்தே கொடுப்பனவு தொடர்ந்து வழங்கப்படும்

### திலக் ரணவிராஜ தெரிவிப்பு

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசாங்கத்தால் வழங்கப்படும் 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவை தொடர்ந்து சில மாதங்களுக்கு வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்திருந்தபோதும் - தற்போது 2 மாதங்களுக்கே அந்த நிதி வழங்கப்பட்டது.

அரசாங்கத்தின் நிதி நிலைமையைப் பொறுத்தே தொடர்ந்தும் அந்தக் கொடுப்பனவை வழங்கவுள்ளதாக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் திலக் ரணவிராஜ தெரிவித்தார்.

சுனாமி அனர்த்தத்தால் இடம்பெயர்ந்த பலப்பிட்டி மக்களின் தேவைகள் குறித்து ஆராய்வதற்காக அங்கு சென்றபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு மற்றும் 100 மீற்றர் எல்லைப்பிரச்சினை பற்றி இடம்பெயர்ந்த மக்கள் திலக் ரணவிராஜவிடம் கேள்வியெழுப்பியிருந்தனர். இதற்குப் பதிலளிக்கும் வகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். (தே)

## அரசியல் விவகார சபைக்கான உறுப்பினர்கள் நியமனம் ஆரம்பம்

(கொழும்பு)

அரசியல் விவகார சபைக்கு உறுப்பினர்களை நியமிக்கும் பணி முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் - இதற்கு ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் உடுவே தம்மாலோக தேரரின் பெயரும் சிபார்சு செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதிகளான சி.வி.விக்னேஸ்வரன் மற்றும் மார்க் பெர்னாண்டோ சவுதி அரேபியாவுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் ஜாவீட் யூசுப், முன்னா[illegible] வடமத்திய மாகாணஆளுநர் ஜிப[illegible] சமரவீர, முன்னாள் பிரதம நீதியரசர் சரத் டீ சில்வா, தமிழ் பத்திரிகை ஒன்றின் பிரதம ஆசிரியர் ஆகியோரின் பெயர்கள் பரிசீலிக்கப்பட்டு வருவதாகத் தெரியவருகின்ற போதிலும் இதுவரை எந்த முடிவுகளும் எடுக்கப்படவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது. பிரதமர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோரின் பரிந்துரைகளின் அடிப்படையில் ஐந்து நாடாளுமன்ற உறுப்பினர்களை ஜனாதிபதி அரசியல் விவகார குழுவுக்கு நியமனம் செய்ய வேண்டும் என்றும், ஆறாவது உறுப்பினர் சிறுபான்மையின மக்கள் சார்பான நாடாளுமன்ற உறுப்பினராக இருக்க வேண்டும் எனவும் அரசியலமைப்பின் 17 ஆவது ஷரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர், சபாநாயகர் மற்றும் ஜனாதிபதியின் விசேட பிரதிநிதி ஆகியோரும் அரசியல் அமைப்பு ஆணைக்குழுவின் பிரதிநிதிகளாக செயற்படுவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## இலங்கை தொழிலாளர் காங்கிரஸுக்கு மேலும் இரண்டு அமைச்சுப் பதவிகள்

(கொழும்பு)

இலங்கை தொழிலாளர் காங்கிரஸுக்கு புதிய அமைச்சர் பதவியொன்றையும், பிரதி அமைச்சர் பதவியொன்றையும் இந்த வாரத்தினுள் வழங்குவதற்கு ஜனாதிபதி சந்திரிகா உடன்பட்டிருப்பதாக அந்தக் கட்சியின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இதன்படி இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் ஆறுமுகம் தொண்டமானுக்கு புதிய அமைச்சர் பதவியும், பிரதி அமைச்சர் பதவி கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவருமான பைசர் முஸ்தபாவுக்கு கிடைக்குமெனவும் அந்தப் பேச்சாளர் தெரிவித்தார். (தே)

## சியாம் சரணின் கடற்படைதள விஜயம் குறித்து சந்தேகம்!

இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் திருகோணமலை கடற்படைத்தளத்திற்கு விஜயம் செய்தமை குறித்து பலத்த சந்தேகம் எழுந்துள்ளது.

பொதுவாக வெளிநாடுகளின் கடற்படை அதிகாரிகளே இலங்கையில் உள்ள கடற்படைத் தளங்களுக்கு விஜயம் செய்து வருவதாகவும், ஆனால் இந்த நடைமுறைக்கு முற்றிலும் முரணான வகையில் இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் திருகோணமலை கடற்படைத் தளத்திற்கு விஜயம் செய்தமை சந்தேகத்தை ஏற்படுத்துவதாக பாதுகாப்பு ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

திருகோணமலை இயற்கைத் துறைமுகமானது சர்வதேச ரீதியில் இலங்கையின் முக்கியத்துவத்தை அதிகரிக்கும் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்துள்ளது.

இந்தப் பகுதியில் தளம் அமைக்கும் வகையிலான போட்டியில் இந்தியாவும், அமெரிக்காவும் தற்போது பாகிஸ்தானும் இறங்கியுள்ள நிலையில் சியாம் சரணின் விஜயம் பலத்த சர்ச்சைகளைத் தோற்றுவித்துள்ளது.

## படுகொலைகளையும், நிழல் யுத்தத்தையும் உடனடியாகவே தடுத்து நிறுத்துங்கள்!

### மேதின பேரணியில் வலியுறுத்தல்

(கொழும்பு)

உலக தொழிலாளர் நாளான நேற்றுமுன்தினம் நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் தமிழ்மக்கள் கலந்துகொண்ட மாபெரும் எழுச்சிப் பேரணி இடம்பெற்றது.

தமிழ்த்தேசியம் வலுப்பெறவும், தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் நியாயப்பாட்டை அனைத்துலக அரங்கிற்கு எடுத்தியம்பும் வகையிலும் நடைபெற்ற இந்தப் பேரணியில் இரண்டாயிரம் வரையிலான தமிழ்மக்கள் பங்கேற்றனர்.

தமிழர் தேசியம், தமிழீழ மக்களின் சுயநிர்ணய உரிமை ஆகியன அங்கீகரிக்கப்படல் வேண்டும். இடைக்கால நிர்வாகம், சுனாமியால் அழிவுக்குள்ளான தமிழர் தாயகப் பிரதேசத்தின் மீள்கட்டமைப்புக்கான பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்பதோடு - தமிழ்மக்களின் இந்தக் கோரிக்கைகள் நிறைவேற்றப்படுவதற்கு சர்வதேச சமூகம், அரசாங்கத்தின் மீது அழுத்தம் பிரயோகிக்கவேண்டும் என்ற கோரிக்கைகள் உள்ளடக்கப்பட்ட பதாகைகள் இந்தப் பேரணியில் தாங்கிச் செல்லப்பட்டன.

அத்துடன், கடந்த வெள்ளியன்று கடத்திச் செல்லப்பட்டு மிருகத்தனமான முறையில் படுகொலை செய்யப்பட்ட தமிழினத்தின் தலைசிறந்த சர்வதேச ஊடகவியலாளர் சிவராமின் (தராகி) படுகொலைக்கான கடும் கண்டனமும் நோர்வே தமிழ்மக்களால் இந்தப் பேரணியில் வெளிப்படுத்தப்பட்டது.

துணிச்சல் மிக்க ஊடகவியலாளனை அரச பயங்கரவாதம் கொன்றழித்துவிட்டது. தமிழினம் ஆற்றல் மிகு எழுத்தாளனை, சமூகவியலாளனை இழந்து நிற்கிறது.

இவ்வாறான காட்டுமிராண்டித்தனமான படுகொலைகளை அரசாங்கம் நிறுத்தவேண்டுமென சர்வதேச சமூகம் கடும் அழுத்தம் பிரயோகிக்கவேண்டும் என்றும் -

இவ்வாறு தொடர்ந்து சமாதான காலத்திலும் தமிழ் ஊடகவியலாளர்களைப் படுகொலை செய்வதன் மூலம் - அரச இயந்திரம் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை நசுக்க முனைகிறது ஆகிய வாசகங்கள் பேரணியில் வலியுறுத்தப்பட்டன.

பர்கன், ஸ்தவாங்கர், துரைண்கம் ஆகிய நோர்வேயின் பிற பிரதான நகரங்களிலும் தமிழ்மக்கள் கலந்துகொண்ட மே நாள் எழுச்சிப் பேரணிகள் நடைபெற்றன.



படுகொலை செய்யப்பட்ட மாமனிதர் சிவராமின் புகழுடல் அவரது கொழும்பிலுள்ள இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்ட வேளை, இடதுசாரி பிரமுகர் வாசுதேவ நாணயக்கார அஞ்சலி செலுத்துவதைக் காணலாம்.

## சிவராமின் படுகொலை குறித்து உடனடி விசாரணை நடத்துக!

### மஹிந்த ராஜபக்ஷ கோரிக்கை



பிரபல ஊடகவியலாளர் டி.சிவராம் கடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தைக் கேள்வியுற்றவுடன் தான் மிகுந்த கவலையும், அதிர்ச்சியும் அடைந்துள்ளதாக தெரிவித்த பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ - இந்தப் படுகொலை குறித்து உடனடியாக விசாரணையை ஆரம்பித்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு தாம் பொலிஸ் மா அதிபரை பணித்துள்ளதாக தெரிவித்தார்.

இது தொடர்பாக பிரதமர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் -

ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் சமூகத்தை நாம் பிரதிநிதித்துவப்படுத்துவதுடன், இவ்வாறான படுகொலைகளைக் கண்டித்தும் வருகின்றோம். இந்த உலகில் ஒவ்வொரு தனி மனிதனுக்கும் சுயாதீனமாக சிந்திப்பதற்கும், செயற்படவும் உரிமையுண்டு. சுதந்திரமான சிந்தனைகளும், கருத்து வெளிப்பாடும் அவரது அடிப்படை உரிமையாகும்.

இதுபோன்ற சம்பவங்கள் நிலையான சமாதான முயற்சிக்கு பெரும் இடையூறாக அமையும். அத்துடன் எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் நிகழக்கூடாது என்பதில் எமது அரசாங்கம் உறுதியாக உள்ளது.

சிவராம் படுகொலையால் கவலையடைந்துள்ள அவரது குடும்பத்தார் மற்றும் உறவினர், நண்பர்களுக்கு எனது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கிறேன் என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சிவராமின் படுகொலையயடுத்து எனக்கும் கொலை அச்சுறுத்தல்!

### விமல் வீரவன்ச முறைப்பாடு

ஊடகவியலாளர் மாமனிதர் சிவராமின் கொலையை அடுத்து தமக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக ஜே.வி.பியின் பிரசாரச் செயலர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் பொலிஸ் மா அதிபரிடம் முறைப்பாடு ஒன்றை செய்துள்ளார். சிவராமின் கொலைக்குப் பின்னால் ஜே.வி.பி இருப்பதாகத் தெரிவித்தே இந்த அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருப்பதாக அவர் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே 3 கிழமைகளுக்கு முன்னர் மகரகமவில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றிய விமல் வீரவன்ச - மாமனிதர் சிவராம் பற்றி அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் உரையாற்றியமை இங்கு குறிப்பிடத்தக்கது.

விடுதலைப் புலிகளின் கருத்துக்களை பரப்பி வருபவர் சிவராம் என விமல் வீரவன்ச தனது உரையில் குறிப்பிட்டிருந்தார்.

இதேவேளை, கிழக்கு மாகாணத்தில் இருந்து தமது செயற்பாடுகளை ஜே.வி.பி நிறுத்திக்கொள்ள வேண்டும் என சங்கிலியன் படை உத்தர விட்டுள்ளது. இல்லையேல் விளைவுகள் பாதகமாக இருக்கும் என்றும் அது எச்சரித்துள்ளது. இவ்வாறு, கொழும்பிலிருந்து வெளிவரும் சிங்களப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மேற்கிந்தியத் தீவுகளுடனான இறுதி டெஸ்ட்
# 588 ஓட்டங்களைக் குவித்த தென்னாபிரிக்கா
# ஆட்டத்தை இடைநிறுத்துவதாக அறிவிப்பு!



(அன்டிகுவா)

மேற்கிந்தியதீவுகள் – தென்னாபிரிக்க அணிகளுக்கிடையே அன்டிகுவாவில் இடம்பெற்றுவரும் நான்காவதும், இறுதியுமான டெஸ்ட் போட்டியின் மூன்றாவது நாளான நேற்று முன்தினம் முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா ஆறு விக்கெட்டுக்களை இழந்து 588 ஓட்டங்களைக் குவித்தநிலையில் ஆட்டத்தை இடைநிறுத்துவதாக அறிவித்தது.

இரண்டாம்நாள் ஆட்டநேரமுடிவில் 4 விக்கெட்டுக்களை இழந்து 525 ஓட்டங்களை தென்னாபிரிக்க அணி பெற்றிருந்தது. இதில் கலிஸ் 127, பிரின்ஸ் 114 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர். இந்தநிலையில், மூன்றாம்நாளான நேற்றுமுன்தினம் கலிஸ் 147 ஓட்டங்களுடனும், பிரின்ஸ் 131 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். இதனையடுத்து பௌச்சர் 11, பொலக் 18 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழக்காமல் இருந்த நிலையில், தென்னாபிரிக்கா 588 ஆட்டங்களுடன் ஆட்டத்தை இடைநிறுத்துவதாக அறிவித்தது.

பந்துவீச்சில் பவல் 2, பெஸ்ட், பிராவோ, கைல் மூவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றியிருந்தனர்.

இதனையடுத்து மேற்கிந்தியத் தீவுகள் தனது முதல் இனிங்ஸை ஆரம்பித்தது. கைலும், ஹின்ஸும் ஆரம்ப வீரர்களாகக் களமிறங்கினர்.



எனினும் ஸ்கோர் 14ஆக இருந்த வேளை, ஹின்ஸ் ஓட்டமெதனையும் பெறாமல் ஆட்டமிழந்தார்.

எனினும் கைலுடன் சர்வான் இணைந்து சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். இதில் கைல் 257 பந்துகளில் 26 பவுண்டரிகள், 3 சிக்ஸர்களுடன் 184 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழக்காமலும், சர்வான் 232 பந்துகளில் 10 பவுண்டரிகள், 2 சிக்ஸர்களுடன் 103 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழக்காமலும் உள்ளனர்.

மூன்றாம்நாள் ஆட்டநேரமுடிவில் மேற்கிந்தியத் தீவுகள் ஒரு விக்கெட் இழப்புக்கு 299 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

பந்துவீச்சில் என்ரினி ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினார்.

## பாகிஸ்தான் வேகப்பந்துவீச்சாளர்
# மொகமட் சமியின் வீட்டில் திருட்டு!

(கராச்சி)



பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளர்களில் ஒருவர் மொகமட் சமி. இவர் தெற்கு பாகிஸ்தானின் கராச்சியில் வசித்துவருகிறார். இந்தியாவுக்கு எதிரான தொடரில் அவர் காயமடைந்தார். இதனால் சிகிச்சை பெற்றுவரும் அவர், இந்த மாதம் மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான தொடரில் பங்குபெறவில்லை.

கடந்த சனிக்கிழமை முகமூடி அணிந்த 4 கொள்ளையர்கள் சமியின் வீட்டுக்குள் புகுந்தனர். அதிகாலை 4 மணியளவில் புகுந்த கொள்ளையர்கள் வீட்டிலுள்ள அனைவரையும் துப்பாக்கி முனையில் விரட்டினர். அவர்களின் கைகளைப் பின்புறமாகக் கட்டி வீட்டிலுள்ள ஒரு தனியறையில் அடைத்து வைத்தனர்.

பின்னர் அவர்கள் வீட்டிலுள்ள நகை, பணம் மற்றும் வெளிநாட்டு பொருட்கள் உட்பட ஏராளமான பொருட்களைக் கொள்ளையடித்துச் சென்றுவிட்டனர். இதன் மதிப்பு சுமார் 25 லட்சம் ரூபாவாகும்.

இது தொடர்பாக சமியின் சகோதரர் பொலிஸில் புகார் செய்துள்ளார். பொலிஸார் வழக்குப் பதிவு செய்து, கொள்ளையடித்த மர்ம மனிதர்களைத் தேடி வருகின்றனர்.

இதேபோல் கடந்தவாரம் அந்த அணியின் துணை உடற்பயிற்சியாளர் வீட்டிலும் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றது. தற்போது சமியின் வீட்டில் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவங்கள் அந்தப் பகுதியில் பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளன.

# விளையாட்டு

# சானியா மிர்சாவின் காயம் குணமடைந்துவிட்டதாம்!
## சிகிச்சையளித்த வைத்தியர் தெரிவிப்பு

இந்திய ரெனிஸ் வீராங்கனை சானியா மிர்சா விளையாடத் தகுதி பெற்றுவிட்டார் என்று அவரது காயத்துக்கு சிகிச்சையளித்த வைத்தியர் அறிவித்துள்ளார்.

இந்தியாவின் ரெனிஸ் நட்சத்திரமான சானியா மிர்சா 6 வாரங்களுக்கு முன்பு காயமடைந்தார். அதற்காக சிகிச்சை பெற்றுவருகிறார். இதனால் எந்தப் போட்டிகளிலும் கலந்து கொள்ளாமல் இருக்கிறார். காயம் காரணமாக டேவிஸ் கிண்ணப் போட்டியிலும் சானியா விளையாடவில்லை.

தற்போது அவருடைய தோள்பட்டைக் காயம் முழுமையாகக் குணமடைந்திருக்கிறது. இதனால் சானியா மிர்சா இனிமேல் விளையாடலாம், அதற்குரிய முழு தகுதியை அவர் பெற்றுவிட்டார் என்று அவருக்குச் சிகிச்சையளித்த ஹைதராபாத் அப்பலோ மருத்துவமனை வைத்தியர்கள் அறிவித்துள்ளனர். இதனை சானியா மிர்சாவின் தந்தை இம்ரான் மிர்சா நிருபர்களுக்குத் தெரிவித்தார்.

இம்ரான் மிர்சா நிருபர்களிடம் மேலும் கூறியதாவது –



சானியா மிர்சா குணமடைந்துவிட்டாலும் தொடர்ந்து மருத்துவர்களின் ஆலோசனையைப் பெறுவார். மே 23ஆம் திகதி தொடங்கவுள்ள பிரெஞ் ஓபன் ரெனிஸில் உறுதியாக சானியா மிர்சா கலந்துகொள்வார். இவ்வாறு அவர் கூறினார்.

சானியா மிர்சா உலக ரெனிஸ் தரவரிசையில் 73ஆவது இடத்தை வகிக்கிறார். பிரெஞ் ஓபன் ரெனிஸ் பிக்சர்ஸ் குலுக்கலில் அவருடைய பெயர் நடப்பு சம்பியன் அனஸ்தாஸ்சியா, இரண்டாவது இடத்தைப் பிடித்த எலினா ஆகியோர் இடம்பெற்றிருக்கிற பட்டியலில் இருக்கிறதென்பது குறிப்பிடத்தக்கது.

## மானிப்பாய் பரிஷ் வெற்றிக்கிண்ண கிரிக்கெட்
# சென்ரலைட்ஸ், ஸ்ரான்லி அணிகள் இறுதியாட்டத்துக்குத் தெரிவாகின!

மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக் கழகத்தினால் மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடத்தப்பட்டு வந்த மானிப்பாய் பரிஷ் வெற்றிக் கிண்ண கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் அரையிறுதியாட்டங்களில் வெற்றிபெற்று இறுதிப்போட்டிக்கு சென்ரலைட்ஸ் விளையாட்டுக் கழகமும், ஸ்ரான்லி விளையாட்டுக் கழகமும் தகுதி பெற்றுள்ளன.

சனிக்கிழமை காலை மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற முதலாவது அரையிறுதியாட்டத்தில் மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக் கழகத்தினை எதிர்த்து ஸ்ரான்லி விளையாட்டுக்கழக அணி மோதியது.

30 ஓவர்களைக் கொண்ட இந்தச் சுற்றுப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக்கழக அணி 23.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 100 ஓட்டங்களை மட்டும் பெற்றுக்கொண்டது. இதில் மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக்கழக வீரர்களான ராஜ் 26, யசோ 14, ஜசி 17, நவீனன் 10 ஓட்டங்களைப் பெற்றனர்.

ஸ்ரான்லி விளையாட்டுக்கழக வீரர்கள் சங்கர் 3, குணா 3, சாம்சன் 2, றொகான், தர்மேந்திரா ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ்.ஸ்ரான்லி விளையாட்டுக்கழகம் 21 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 103 ஓட்டங்களைப் பெற்று 4 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

இதில் ஸ்ரான்லி அணிக்காக செல்வராசா 36, சங்கர் 25, தனுஷ் 13 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

மானிப்பாய் பரிஷ் வீரரான பாஸ்கரன் 4, திலக், ராஜ் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இதன் மூலம் கடந்த 10 வருடங்களுக்கு மேலாக யாழ்.மாவட்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டிகளில் பங்குபற்றிவருகின்ற ஸ்ரான்லி விளையாட்டுக் கழகம் முதன்முதலாக ஓர் கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்ற பெருமையைப் பெற்றுக்கொண்டது.

சனிக்கிழமை மாலை 1.30 மணிக்கு நடைபெற்ற இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் சென்ரலைட்ஸ் விளையாட்டுக் கழகத்தினை எதிர்த்து அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம் மோதியது.

இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய சென்ரலைட்ஸ் விளையாட்டுக் கழகம் 28 ஓவர்களில் 4 விக்கெட் இழப்புக்கு 187 ஓட்டங்களைப் பெற்றது. இதில் றொகான் 64, பிரகாஸ் ஆட்டமிழக்காமல் 44, கார்த்தீபன் 26, பிருந்தாவன் 19 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழக வீரர்கள் ரதீஸ், மதன்ராஜ், சுகதாஸ், மகேந்திரராஜா ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 136 ஓட்டங்களை மட்டுமே பெற்றதால், 51 ஓட்டங்களால் சென்ரலைட்ஸ் அணி வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது.

இதில் அரியாலை ஐ.வி.க.அணியின் சார்பில் குகன் 37, காண்டீபன் 28, குட்டி 22, ரதீஸ் 18 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் சென்ரலைட்ஸ் அணியின் சார்பில் பிரசாத் 3, பிரகாஸ், சாம்ராஜ், மதூசன் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இந்தச் சுற்றுப் போட்டியானது யாழ்.மாவட்டத்தில் உள்ள 8 அழைக்கப்பட்ட அணிகளுக்கிடையில் லீக் முறையில் நடத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (58)

# கூடைப் பந்தாட்ட அரையிறுதிப் போட்டி!

யாழ்.கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான ஆண்களுக்கான கூடைப்பந்தாட்ட அரையிறுதி ஆட்டம் இன்று கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியை எதிர்த்து வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மோதுகின்றது. இதேவேளை யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி இறுதியாட்டத்துக்குத் தகுதிபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வுபெறுகிறார் ஷேன் வோன்!

(சிட்னி)



அவுஸ்ரேலிய சுழற்பந்து வீச்சாளர் ஷேன் வோன் சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வுபெறவுள்ளார்.

அவுஸ்ரேலிய கிரிக்கெட் அணியின் புகழ்பெற்ற சுழற்பந்து வீச்சாளர் ஷேன் வோன். இவர் சர்வதேச போட்டிகளிலிருந்து இன்னும் இரண்டு ஆண்டுகளில் ஓய்வு பெறுவாரென்று அவருடைய சகோதரரும், முகாமையாளருமான ஜேசன் நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

அவர் சிட்னியிலிருந்து வெளிவரும் சன்ஹெறால்ட் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார். 2006-2007ஆம் ஆண்டு அவுஸ்ரேலியாவில் ஆஷஸ் தொடர் நடைபெறவுள்ளது. இதில் பங்கேற்று விளையாடியபின்னர், வோன் ஓய்வுபெறத் திட்டமிட்டுள்ளதாகவும், அதைத் தொடர்ந்து தனது குடும்பத்தினருடன் அதிக நேரத்தைச் செலவிட அவர் முடிவு செய்திருப்பதாகவும் முகாமையாளர் ஜேசன் அந்தப் பேட்டியில் கூறியுள்ளார்.

வோன் இன்னும் டெஸ்ட் போட்டிகளில் விளையாடுவதை மிகவும் விரும்புகிறார். அவர் தனது முதல் டெஸ்டை இந்தியாவுக்கு எதிராக 1992ஆம் ஆண்டு விளையாடினார். அவருடைய கடைசி டெஸ்ட் போட்டி சிட்னி கிரிக்கெட் மைதானத்தில் நடைபெறும் டெஸ்ட் போட்டியாக இருக்குமென்றும் ஜேசன் தெரிவித்தார்.

வோன் தற்போது டெஸ்ட் போட்டிகளில் 583 விக்கெட்டுக்களைக் கைப்பற்றி உலக சாதனையை ஏற்படுத்திய வீரராகத் திகழ்கிறார். தொடர்ந்து நல்லநிலையில் விளையாடுவாரேயானால், 2007ஆம் ஆண்டுக்குள் 700 விக்கெட்டுக்களைக் கைப்பற்றிவிடுவார் என்றும் முகாமையாளர் ஜேசன் நம்பிக்கையுடன் கூறினார்.

2007ஆம் ஆண்டு மேற்கிந்தியத் தீவுகளில் உலகக் கிண்ணப் போட்டி நடைபெறவுள்ளது. அதில் தனது முழுத் திறமையையும் காட்டவேண்டும் என்கிற லட்சியத்தோடு வோன் பயிற்சி பெற்றுவருகிறார்.

அந்த உலகக்கிண்ணத்தை அவுஸ்ரேலியா கைப்பற்றவேண்டும். அதற்கு தான் முக்கிய காரணமாக இருக்கவேண்டும் என்கிற எதிர்பார்ப்புடன் வோன் தன் திறமையை மெருகூட்டிக்கொண்டிருக்கிறார் என்றும் முகாமையாளர் ஜேசன் தெரிவித்தார்.

# உதைபந்தாட்ட போட்டி

சண்டிலிப்பாய் பிரதேச செயலகப் பகுதிக்குட்பட்ட கழகங்களுக்கிடையிலான 2005 ஆம் ஆண்டிற்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி நேற்று முதல் 5ஆம் திகதி வரை கழகங்களுக்கு அனுப்பப்பட்டுள்ள போட்டி அட்டவணையில் உள்ளவாறு நடைபெற்றுவருகின்றன.

போட்டிகள் தினமும் 3 மணிக்கு மானிப்பாய் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருவதாகவும் கழகங்களினை குறிப்பிட்ட நேரத்திற்கு சமுகம் கொடுக்குமாறும் சண்டிலிப்பாய் பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் ரிச்சாட் மோகன் கேட்டுக்கொண்டுள்ளார். (58)



நியூயோர்க்கில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற உலக குத்துச்சண்டைச்சங்க சம்பியன் போட்டியில் - 33 வயதாகும் பியூர்டோரிகோ வீரர் ஜோன் ரூயிஸ் விடும் குத்தைச் சமாளிக்கிறார் அமெரிக்காவைச் சேர்ந்த ஜேம்ஸ் டோனி (இடது). 36 வயதாகும் டோனி 116-111, 116-111, 115-112 என்ற புள்ளிகள் கணக்கில் ரூயிஸைச் சாய்த்து சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றினார்.

### இனவாதத்தைக் காரணம் காட்டி

# தமிழரின் அரசியல் உரிமைகளை மறுப்பது சர்வதேசத்துக்கு எரிச்சலை ஏற்படுத்தியுள்ளது

## யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி தெரிவிப்பு



சந்திரிகா தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணியும், ஜே.வி.பி யும் இனவாதத்தைக் காரணம் காட்டி, தமிழரின் அரசியல் உரிமைகளை மறுப்பதும், மனித நேய உரிமைகளை மறுப்பதும், மனிதநேய உதவிகளை புறக்கணிப்பதும் சர்வதேச சமூகத்திற்கு எரிச்சலை ஏற்படுத்தியுள்ளது என யாழ். மாவட்ட அரசியற் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் யாழ்.பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெற்ற மேதின கூட்டத்தில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தியபோதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் -

சுதந்திரம் மனிதனின் பிறப்புரிமை. சுயநிர்ணய உரிமை இயல்பு வாழ்வின் அங்கீகாரம். இதை மறுப்பது மன்னிக்க முடியாத குற்றம், மறுக்க முடியாத மனித உரிமை மீறல், இது உலக சமூகத்தின் குரல்.

நிலத்தால், தொழிலால், பண்பாட்டு அடையாளங்களால், வாழ்முறைகளால், வரலாற்றின் குறிப்புக்களால் தவித்து நிற்கும் இனம் - தன்னாட்சிக்குத் தகுதியுடையது என ஐ.நா சாசனம் அறுதியிட்டு உரைக்கிறது.

இந்த நாள் ஒடுக்கப்பட்ட, சுரண்டலுக்கு உள்ளான உலகத் தொழிலாளர் தமது உரிமைகளை வென்றெடுத்த ஒரு பொதுநாள்.

ஒடுக்கப்பட்ட எல்லோரும் அணி திரளும் நாளாக பரிணாமவளர்ச்சி கண்டிருக்கிறது. சிங்கள பௌத்த பேரினவாதத்தின் தமிழின அழிப்பு நடைமுறையை உடைத்தெறிந்து, தம் இருப்பை நிலைப்படுத்திவரும் தமிழ்த் தேசியஇனம் - தன் அபிலாஷைகளை சர்வதேசத்துக்கு மீண்டும் வெளிப்படுத்தும் நாளாகவும் இது அமைகிறது.

எம் இனத்தின் மூத்த தலைவர்கள் சிலரது நம்பிக்கையீனத்தினாலும், தூரநோக்குப் பார்வையின்மையாலும், தந்திரோபாயமற்ற போக்காலும் சிங்களத் தலைவர்கள் விரித்துக்கொண்ட பொறிக்குள் அகப்பட்டு மீள முடியாது, தமிழ்த் தேசிய இனத்தின் போராட்ட முனைப்புகள் மழுங்கடிக்கப்பட்டன.

முடியாது என்று ஒன்றுமேயில்லை என்பதை தாரக மந்திரமாகக்கொண்டு, தமிழ்த் தேசிய இனத்துக்குத் தலைமை தாங்கும் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் - தன்னம்பிக்கை உயர்வு, தூரநோக்குப் பார்வை, தந்திரோபாய மதிநுட்பம், எதிரிகளின் பொறிகளை உடைத்தெறிந்து எதிரிகளை அப்பொறிக்குள் தள்ளும் ஆற்றல், ஆளுமை, சர்வதேச ஒழுங்கு மாற்றங்களுக்கேற்ப மாற்றங்களை ஏற்படுத்தி, எதையும் எதிர்கொண்டு முறியடிக்கும் நுட்பத்தாலும் பலம்மிக்க சேனைக்கட்டமைப்பை நிறுவி - தேசிய அரசியலிலும், சர்வதேச அரசியலிலும் முன்னேற்றங்களை ஏற்படுத்தி, எமது விடுதலைப் போராட்டத்தின் வெற்றிக்கான காலத்தை தீர்மானித்துக் கொண்டிருக்கின்றார்.

யுத்த நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டு மூன்றாண்டுகள் கடந்து கொண்டிருக்கிறது. நம்பிக்கையான சூழல் மாறி, இயல்புநிலைக்கு நெருக்கடிகள் ஏற்பட்டு,ஒப்பந்த நடைமுறைக்கு மாறாக அரசின் போக்கு இருக்கிறது.

ஆனால் தமிழர் தரப்பு நிதானத்தைப் பேணுகிறது. இது பலவீனத்தின் வெளிப்பாடு அல்ல பலத்தின் குறியீடே.

யுத்தப் பாதிப்புகளுக்கு தீர்வு கிடைக்கும் என நம்பிய மக்களுக்குத் தீர்வு கிடைக்கவில்லை. மீளக்குடியமரலாம் என நம்பிய மக்கள் ஏமாற்றப்பட்டனர். தங்களது ஊர்களையும், காணிகளையும், வீடுகளையும் பறிகொடுத்து இன்றும் நாதியற்றுக் கிடக்கின்றார்கள்.

கருணா குழு போன்று இராணுவத் துணைப்படைகளின் உதவியுடன் - படையினர் தமிழர் தாயகப்பகுதிகளில் தமது கெடுபிடிகளை அதிகரித்து வருகின்றனர்.

பொருளாதார வளர்ச்சியும், வேலை வாய்ப்புக்களும் இன்றி எமது வடக்கு - கிழக்கில் இன்னும் மக்கள் வாழ்கின்றார்கள். பேரழிவுகள் இன்னும் மாறாது உள்ளது. இவற்றையெல்லாம் விட, சுனாமி பேரலைகள் எம் மக்களை பெரும் அழிவிற்குள்ளும், அவலத்திற்குள்ளும் தள்ளியுள்ளது. இதற்கு இன்று வரை தீர்வு இல்லை.

யுத்த நிறுத்தத்தை மட்டும் நீடித்துக் கொண்டு தமிழர்பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்காமல், தமிழர்களுக்கான கட்டுமானங்களைப் பலவீனப்படுத்தி, அழிப்பதுவே அரசின் வியூகமாக உள்ளது. இதனை நாங்கள் தெளிவாக உணரக்கூடியதாக உள்ளது.

ஆறு சுற்றுப் பேச்சுகளின்பின் உருவான சிரான் அமைப்பும் செயலின்றி செத்து விட்டது. இடைக்கால தன்னாட்சி அதிகார சபை பற்றிய பேச்சையே அரசு மூடிவிட்டது.

சுனாமியால் ஏற்பட்ட மனித அவலத்தை துடைப்பதற்கான பொதுக்கட்டமைப்பு பல இழுத்தடிப்புக்களுக்கு மத்தியில் விடுதலைப்புலிகளின் தளர்வான விட்டுக்கொடுப்பு நிலையில், விடுதலைப்புலிகளால் ஏற்றுக் கொள்ளப்பட்டபோதும் இது நடைமுறைக்கு வரவில்லை.

இது நடைமுறைக்கு வருமா? வருவதற்கான சூழல் இல்லை என்றே அரசியல் ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள். அயினும் நாம் ஏமாந்தவர்களுமல்ல ஏமாறுபவர்களும் அல்ல.

இந்த நிலையில் விரக்தி அடைந்த எம் மக்கள் - கொதிப்படைந்து, தேசியத் தலைவருக்கு தமக்கான விடிவை விரைவுபடுத்த, வழிகளைத் திறக்குமாறு அழுத்தம் கொடுத்து நிற்கும் நிலையை நாம் இங்கு காண்கிறோம்.

மக்களே தீர்மானங்களை எடுக்கும் காலச் சக்கரம் இன்று உருவாகி இருக்கின்றது. மக்கள் மீது நம்பிக்கை கொண்ட தலைவரும், தலைவர் மீது நம்பிக்கை கொண்ட மக்களும் இந்த காலச்சக்கரத்தை வெற்றி கொள்வார்கள் என்பது திடமான உறுதி.

தமிழர் தாயகத்துக்கு வரவிருந்த வெ[illegible]நாட்டுப் பிரதிநிதிகளின் வருகை, சிங்கள அரசால் திட்டமிட்டுப் புறக்கணிக்கப்பட்டது. ஆனால் சர்வதேசமோ தமிழர் தரப்புக்கு தமது கதவுகளைத் திறந்து விட்டுள்ளது. தமிழர் தனிமைப்படுத்தப்பட்டுள்ள சக்தியல்ல. சர்வதேசத்தில் தமிழர் தேசத்துக்கான அரசியல் தளமும் உண்டு. சர்வதேசத்துக்கான தளமும் உண்டு. இது எமது போராட்டத்திற்கான அங்கீகாரத்துக்குரிய வாய்ப்பை ஏற்படுத்துவது தவிர்க்க முடியாதது.

மனித உரிமைஎன்ற விடயத்தில் உலக ஒழுங்கு முதன்மை கொண்டுள்ள இந்தச் சந்தர்ப்பத்தில், அதிக செல்வாக்கைச் சர்வதேசத்தில், விடுதலைப்புலிகள் கொண்டுள்ள இந்தத் தருணத்தில் - சந்திரிகா அரசும், அதன் பங்காளியான ஜே.வி.பியும் இனவாதத்தைக் கிழப்பி, அரசின் அமைப்பு சட்ட வரைபைக் காரணம் காட்டி, அரசியல் உரிமைகளை மறுப்பதும், மனித நேய உதவிகளை புறக்கணிப்பதும், சந்திரிகாவின் காலத்தில் நடந்த செம்மணிப் படுகொலையை உலகறியச் செய்த நாட்டுப்பற்றாளர் நிமலராஜனையும், துரோகத்தனத்தை தோலுரித்துக் காட்டியதால் - நாட்டுப்பற்றாளர் நடேசனையும், தமிழர் தேசியத்தை வலியுறுத்தி நின்றதால் - மாமனிதர் சிவராமையும் படுகொலை செய்தது போன்ற மோசமான சம்பவங்கள் சர்வதேச சமூகத்துக்கு எரிச்சலை ஏற்படுத்தியதுடன், இவர்களை மனித உரிமைக்கு எதிரான சக்தியாகவும் கருதவைத்துள்ளது.

இந்தச் சந்தர்ப்பத்தில் உரிமைக்காக துடித்துக் கொண்டிருக்கும் எம்மக்கள் - மீண்டும், மீண்டும் நம்பிக்கையுடன் அரசியல் ரீதியாகவும், இராணுவ ரீதியாகவும் தம்மைப் பலப்படுத்த வேண்டியது காலத்தின் தேவையாகும். இதுவே யதார்த்தமுமாகும்.

எனவே நம்பிக்கையுடன் திரண்டெழுவோம், தலைவர் அதற்கான வழிகளைத் திறப்பார். தலைவர் பிரபாகரனின் இலட்சியம் வெற்றிபெறும். அவரின் தீர்க்க தரிசனம் நிறைவு பெறும், மாவீரர்களின் கனவுகள் நனவாகும், குருதி தந்து சோறூட்டி வியர்வை சிந்திய எம் மக்கள் சுதந்திரம் அடைவார்கள் என்பது திண்ணம் எனத் தெரிவித்தளளார்.

### கிராம அபிவிருத்தி சங்கம் அமைப்பதற்கு காணி

(அரியாலை)

அரியாலையில் கிராம அபிவிருத்திச் செயலகம் அமைப்பதற்கு - அரியாலை சித்தி விநாயகர் ஆலய பரிபாலன சபையினர் இரண்டரைப் பரப்பு காணியை நீண்டகால குத்தகைக்கு, நல்லூர் பிரதேச செயலகத்துக்கு வழங்கியுள்ளனர்.

இந்த நிலப்பரப்பில் கட்டடம் அமைக்கப்பட்டு - கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி வங்கி, மாதர் அபிவிருத்திச் சங்கம் என்பவற்றை உள்ளடக்கி - கிராம அபிவிருத்திச் செயலகம் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக, நல்லூர் பிரதேச செயலகத்தினர் தெரிவித்தனர். (63)

### அபிவிருத்தி குழுக்கூட்டம்

(தவசிகுளம்)

தவசிகுளம் கிராம அபிவிருத்தி தொடர்பான அபிவிருத்திக் குழுக்கூட்டம் - எதிர்வரும் 14 ஆம் திகதி தவசிகுளம் போக்கட்டி றோமன் கத்தோலிக்க பாடசாலையில் மாலை 3 மணிக்கு கி.இராசையா தலைமையில் இடம்பெறவுள்ளது.

இதில் நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் கலந்துகொள்ளவுள்ளார். (29)



ஐ.ஓ.எம். நிறுவனத்தின் நிதியுதவியுடன் கல்வயலில் அமைக்கப்பட்ட அறவழி பாலர் பாடசாலைக் கட்டடத்தை - நிறுவனத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி சீமாட்டி மேரி சிகானி திறந்து வைப்பதையும், நிறுவனத்திட்ட முகாமையாளர் சாம் சமரசிங்க மற்றும் பிரமுகர்களையும் காணலாம்.

### புளியங்கூடல் கிராமத்தில் பொதுமண்டபம் அமைப்பு

ஊர்காவற்றுறை பிரதேசத்துக்குட்பட்ட புளியங்கூடல் கிராமத்தில் - நிகொட் நிறுவனத்தின் நிதியுதவியுடன் பொது மண்டபம் ஒன்று அமைக்கப்படவுள்ளது. இதேவேளை, இப்பொது மண்டபம் அமைப்பது தொடர்பாக பொருத்தமான இடத்தைத் தெரிவுசெய்வதில் இழுபறிகள் நிலவுவதாகவும் தெரியவருகிறது.

அப்பகுதி மக்கள் சிலர் ஒரு குறிப்பிட்ட இடத்தையும் , அந்த ஊர் கிராம அபிவிருத்திச் சங்கம் பிறிதொரு இடத்தையும் தெரிவு செய்துள்ளதால், கட்ளடடத்துக்கான இடத்தைத் தெரிவு செய்வதில் இழுபறி நிலை நிலவிவருகின்றது.

இந்த இடத்தெரிவு செய்வதில் மேலும் சிக்கல் உருவாகி தாமதமடையுமானால், நிறுவனத்தால் ஒதுக்கிய நிதி கிடைக்காமல் போகும் அபாயம் இருப்பதாக அந்த ஊர் பொது மகன் ஒருவர் தெரிவித்தார். (44)


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்



பெயர் : ஸ்ரீ.ஷானுஜா
முகவரி :கொக்குவில்.

வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் :
முகவரி :
பிறந்த ஆண்டு:
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.
பெற்றோர் ஒப்பம்


### மந்துவில் பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வு

மந்துவில் பகுதியில் சட்டவிரோத மண் அகழ்வு அதிகரித்து வருவதாக அந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இந்தப் பகுதியில் சட்டவிரோதமாக மண் அகழ்வை மேற்கொள்பவர்களிடம் - காணி உரிமையாளர்கள் சென்று இது தொடர்பாக கேட்கும் போது, சட்டவிரோத மண் அகழ்பவர்களால் தாக்குதலுக்கு இலக்காகின்றனர்.

வயல் நிலங்களில் காணப்படும் வரம்புகளை வெட்டிக்கூட அந்தப் பகுதியில் மண் அகழப்படுவதாக உரிமையாளர்கள் கூறுகின்றனர்.

இதனால் விவசாய செய்கை - பாதிப்படைவதாக அவர்கள் கவலையடைகின்றளனர். (29)

# நெடுந்தீவில் புனரமைக்கப்பட்ட வெட்டுக்களிக்குளம் கையளிப்பு

(நெடுந்தீவு)

நெடுந்தீவு பிரதேச மக்களுக்கென - நியாப் - I திட்டத்தின் கீழ் வெட்டுக்களிக்குளம் புனரமைக்கப்பட்டு, தற்போது நீரைச் சேகரிக்கக்கூடியதாகவும், வரட்சிக் காலத்தில் எழும் உவர்ப் புழுதியின் தாக்கத்தைக் கட்டுப்படுத்தும் வகையிலும் வேலைகள் முடிவடைந்துள்ளதாக -

யாழ். மாவட்ட நியாப் திட்டப் பிரதிப் பணிப்பாளர் கே.பாலகிருஷ்ணன் - கடந்த செவ்வாய்க்கிழமை நெடுந்தீவு சீக் கிலியாம்பள்ளம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் இடம்பெற்ற வெட்டுக்களிக்குளம் கையளிப்பு தொடர்பான முன்னாயத்தக் கூட்டத்தில் தெரிவித்தார்.

இந்த வேலைத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு, மக்கள் பங்களிப்புத் தேவைப்பட்டபோது, மக்கள் முழுமையாக முன்னின்று பணியாற்றி முடித்துள்ளனர்.

இந்த வகையிலே இந்தத் திட்டம் மூலம், தொடர்ந்து நெடுந்தீவுப் பகுதியில் அரசசார்பற்ற நிறுவனங்களால் வேலைத்திட்டங்களை நடைமுறைப் படுத்துவதற்கு இந்தப் பகுதி மக்கள் முன்வந்துள்ளனர்.

செலவிட்ட பணத்தொகையை விட - மக்கள் கூடிய பயனைப் பெற வேண்டும். அத்துடன் இந்தக் குளத்தைத் தொடர்ந்து பாதுகாக்கவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

நெடுந்தீவுப்பகுதி கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் - எஸ்.பி.அருளப்பு தலைமையில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில், நியாப் பொறியியலாளர் க.முருகவேள், நீர்ப்பாசன திணைக்கள பொறியியலாளர் க.கருணாநிதி, நீர்ப்பாசன திணைக்கள தொழில்நுட்ப உத்தியோகத்தர் இ.குணபாலசிங்கம் மற்றும் நெடுந்தீவுப் பகுதிக்கான நியாப் சமூக வலுவூட்டலாளர் ஆகியோருடன், குளத்தை அண்டிவாழும் மக்களும், அந்தப் பகுதி பொது அமைப்புப் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

இதேவேளை இந்தக் குளத்தின் பராமரிப்பு மற்றும் அது தொடர்பான நடவடிக்கைகளை எடுப்பதற்கென பதினொருபேர் கொண்ட குழுவினரும் தெரிவுசெய்யப்பட்டனர்.

நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கிளிநொச்சி, யாழ்ப்பாண மாவட்ட பிரதிப் பணிப்பாளர் நெடுந்தீவுக்கு வருகை தந்து, வெட்டுக்களிக்குளத்தின் வேலைக்கான இறுதிக்கட்டக் கொடுப்பனவு செய்தல் தொடர்பாக நிறைவேற்றி முடிக்கப்பட்ட வேலைகளைப் பார்வையிட்டுச் சென்றுள்ளதாகவும் தெரியவருகிறது.

உலக வங்கியின் நிதி உதவியுடன் நியாப் - I திட்டத்தின் மூலம் வெட்டுக்களிக்குளம் புனரமைப்பு வேலைகள் நிறைவேற்றப்பட்டுள்ளதுடன், நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகளின் விவேகமான செயற்பாட்டினாலேயே வேலைகள் விரைவில் முடிவடைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (113)

பல்சுவை அரங்கு

## இராட்சதப் பூ



பூக்களில் ஓரளவு பெரிய பூக்களே இது வரை காலமும் மக்களை ஆச்சரியப் பட வைத்தன. ஆனால் தற்போது இந்தோனேஷியாவின் சுமாத்திராப் பகுதிகளில் காணப்படுகின்ற இந்தச் சிவப்பு நிறப் பூவினுடைய உயரம் - 2.11 மீற்றர் ஆகக் காணப்படுகிறது.

இது கியூ என்ற இடத்தில் 2003 ஆம் ஆண்டில் பூத்ததாகக் கூறப்படுகிறது. இந்த மலருக்கு 'கோர்ப்ஸ்' என்று பெயரிடப்பட்டிருக்கிறது.

இதனுடைய இதழ்கள் நாளாந்தம் 10 சென்ரிமீற்றர் விரிவதாகக் கூறப்படுகிறது. இது அப்படியே விரிந்து ஒரு குடைபோல உருவாகிறது.

அத்துடன் இது தான் உலகிலே காணப்படுகின்ற இராட்சத மலராக உள்ளது.

இத்தகைய மலர்களைப் பாதுகாப்பதில் சர்வதேச தாவரவியல் நிறுவனங்கள் போட்டி போட்டுக்கொண்டு நிற்கின்றன. இதனுடைய மணம் ஒரு எரிந்த மணமாக இருப்பதாகவும் கூறப்படுகிறது.

## தேவை தாதிகள்

பிரிட்டனில் ஒவ்வொரு பாடசாலையிலும் இரண்டு மடங்கு மருத்துவத் தாதிகளை நியமிக்குமாறு அரசாங்கம் உடனடி உத்தரவு விடுத்திருக்கிறது. கடந்த ஆண்டு அரச பாடசாலைகளில் மருத்துவத் தாதிகள் நியமிக்கப்பட்டிருந்தார்கள். இதற்காகப் பாடசாலைகளில் உடனடியாக 3 ஆயிரம் தாதிகள் பணியைப் பொறுப்பேற்றுக்கொண்டிருக்கிறார்கள்.



பாடசாலைகளில் மாணவர்கள் நோய்வாய்ப்படுவது அதிகரித்து வருகிற இந்த நேரத்தில், மருத்துவத் தாதிகளைப் பாட சாலைகளில் நியமித்தது மாணவர்களுக்கு மிகவும் நன்மை பயக்கும் எனக் கூறப்படுகிறது. 2010 ஆம் ஆண்டளவில் ஏறக்குறைய 30 ஆயிரம் மேலதிகமான தாதிகளை நியமித்துப் பாடசாலைகளில் மருத்துவ ரீதியான ஒரு பாதுகாப்பைக் கொடுக்கவேண்டும் என, அரசாங்கம் விரும்புகிறது. பிரித்தானியாவில் ஏற்படுத்தப்பட்ட பாடசாலைத் தாதிகள் நியமனம் தொடர்ந்து ஆசிய நாடுகளுக்கும் பரவக் கூடும் என எதிர்பார்க்கலாம்.

## புற்றுநோயைத் தடுக்கும் விற்றமின் – D



நுரையீரல் புற்று நோய்க்குரிய மருந்தாக தற்போது விற்றமின் D கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. ஏறக்குறைய 40 வீதமான நோயாளிகளுக்கு விற்றமின் D மருந்து வேலை செய்திருக்கிறது என மருத்துவர்கள் கூறுகிறார்கள். 456 நோயாளிகளை நுரையீரல் புற்று நோய்க்காக ஆராய்ந்து பார்த்த போது, கார்பாட்டு பல்கலைக்கழக ஆய்வுக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் புற்றுநோய் நோயாளிகளுக்கு சத்திரசிகிச்சை செய்வதிலும் பார்க்க விற்றமின் D உடலுக்கு நோவில்லாமல் புற்றுநோயைக் குறைக்கக் கூடியதாக இருக்கும் எனக் குறிப்பிட்டுள்ளது. ஐரோப்பாவில் மட்டும் நுரையீரல் புற்று நோயால் ஏறக்குறைய 33 600 நோயாளிகள் வருடா வருடம் இறக்கின்றார்கள். புற்றுநோயாளிகள் சூரிய ஒளி மூலம் விற்றமின் D யைப் பெறமுடியும் எனவும் இது நாளாந்தம் அவர்களுடைய புற்று நோயைக் குறைக்கக்கூடும் எனவும் மருத்துவ விஞ்ஞானிகள் கூறிக் கொண்டிருக்கின்றார்கள்.

## இரகசியமான பூச்சியினங்கள்



பல பறக்கும் பூச்சியினங்களைப் பற்றிய இரகசியமான தகவல்கள் ஆய்வாளர்களால் வெளியிடப்பட்டிருக்கின்றன. கனரி தீவுகளில் இப்படியான பூச்சியினங்கள் - கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. இந்தத் தீவுகளில் காணப்படுகின்ற மிருக இனங்கள் எல்லாமே புதுமையாகக் காணப்படுவதாகவும், ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். ஆரம்பத்தில் காணப்படுகின்ற பூச்சியினங்கள், பின்பு வித்தியாசமானதாக மாறுகின்றன. ஒரு பூச்சியினம் - 10 வித்தியாசமான பூச்சியினங்களை உருவாக்கக்கூடியவாறு இருக்கிறது. இதனைப்போல பல பூச்சியினங்கள் தாய்ப் பூச்சியினத்துக்கு வேறுபாடான முறையில் காணப்படுகின்றன. ஒன்றை ஆராய்ந்து கொண்டிருந்தால், புதிதாக வேறொரு பூச்சியினம் உருவாகி, விஞ்ஞானிகளின் தலையைப் பிய்க்கவைத்துக்கொண்டிருக்கிறது. உண்மையில் இந்த கனரித் தீவு - ஜேர்மனி நாட்டுக்கு ஒரு பொக்கிஷம் என்றுதான் கூறவேண்டும்.

தற்போது இத்தகைய பூச்சியினங்கள் ஹவாய்த் தீவுகளிலும் கிடைப்பதாகக் கூறப்படுகிறது.

## உருகும் பனிக்கட்டி





அந்தாட்டிக்காக் கண்டத்தில் பனிப்பாறைகள் எல்லாம் கரைந்து கொண்டு வருவதாகக் கூறப்படுகின்றது. கிட்டத்தட்ட 90 வீதமான பனி மலைகள் நீராகி விட்டதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. கடந்த 50 வருடங்களில் இப்படி பனிமலைகள் உருகியது இது தான் முதல் தடவை என்று கூறப்படுகிறது. பிரித்தானியாவும், அமெரிக்காவும் இத்தகைய ஆராய்ச்சிகளில் தற்போது ஈடுபட்டுக் வருகின்றன. துருவப் பகுதிகளில் வெப்பநிலை அதிகரித்தால், புவியினுடைய தட்ப வெப்பநிலையில் சடுதியான மாற்றங்களை எதிர்பார்க்கலாம் எனப் புவியியலாளர்கள் கருத்துத் தெரிவிக்கிறார்கள். 1940 மற்றும் 1960 ஆம் ஆண்டுகளில் சடுதியான வெப்பநிலை அதிகரிப்பு ஏற்பட்டது எனப் பழைய தகவல்கள் கூறுகின்றன. 1993 ஆம் ஆண்டில் துருவப் பகுதியில் உடையத் தொடங்கிய பனிக்கட்டிகள் - தற்போது தொடர்ச்சியாக உருகத் தொடங்கி யிருப்பது கேள்விக்குறியாக இருக்கிறது.

## சிசு மரணம்




ஐரோப்பிய நாடுகளில் பிள்ளைகள் பிறக்கும் போது இறப்பது அதிகரித்துள்ளது. இதற்குரிய காரணங்களை ஆராய்ந்து நோக்கினால், வைத்தியசாலையில் காணப்படுகின்ற முக்கிய உபகரணங்களின் செயலற்ற தன்மைதான் என வைத்தியர்கள் கூறுகிறார்கள்.

பிறக்கும்போதே இறந்து பிறக்கின்ற குழந்தைகளைவிட, பிறந்து உயிருடன் சில மணி நேரங்கள் இருந்து, பின்பு இறக்கின்ற குழந்தைகளும் காணப்படுகின்றன.

இதைக் கண்டறிவதற்கு 2004 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் ஒரு குழுவொன்று உருவாக்கப்பட்டிருக்கிறது. இது சிசு மரணத்தைத் துப்புத் துலக்கிவருகிறது. சாதாரணமாக பிரித்தானியாவில் மட்டும் வருடாந்தம் 5 ஆயிரம் குழந்தைகள் பிறக்கின்றன. அதிலும் 8700 தாய்மார்களுக்கு ஒரு குழந்தை வீதம் இறந்திருப்பதாகக் கருத்துக் கணிப்புகள் தெரிவிக்கின்றன.

தற்போது தாய்மார்களுக்கென விசேட கவனிப் புக்குழு ஒன்று மற்றும் தாதிகளைக் கொண்ட வைத்தியர்கள் - எல்லாப் பிரதேசங்களிலும் உருவாக் கப்பட்டுள்ளனர்.

## திரை விமர்சனம்

# மும்பை எக்ஸ் பிரஸ்



கமலஹாசனின் வழக்கமான நகைச்சுவை மசாலாப் படம்.

சந்தானபாரதியின் மகனைக் கடத்தி, பணத்தைப் பறிக்க - பசுபதி, வையாபுரி, கமலின் மைத்துனர் ஆகியோர் திட்டம் போடுகிறார்கள். இதற்குள் கமலும் இவர்களுடன் இணைந்துகொள்கிறார். இவர்கள் மனீசாவின் மகனை மாறிக் கடத்துகிறார்கள்.

படம் முழுக்க ஒரே சிரிப்பொலிகள். கமல் மரணக் கிணற்றில் மோட்டார் சைக்கிள் ஓட்டும் வேலை செய்து பிழைப்பவர். அவர் பையனைக் கடத்தும் பொழுது புகைக் கூண்டுக்குள் பைக் ஓட்ட பதற்றத்துக்குப் பதில் சிரிப்புத்தான் வருகிறது. கமலின் புனை பெயரும் மும்பை எக்ஸ்பிரஸ்தான். ரயிலை நிறுத்தும்படி கமிஷனர் நாஸர் சொல்ல, பொலிஸ் கமலைத் தப்பவிடுவது நல்ல நகைச்சுவை.

இன்சூரன்ஸ் ஏஜென்டாக ரமேஷ் அரவிந், வையாபுரி, .கோவை சரளா என சிரிப்புக் கூட்டம்.

படத்தில் முத்தக் காட்சிகளோ, டூயட்டோ இல்லை.

டிஜிட்டல் தொழில்நுட்பத்தில் சித்தார்த்தன் ஒளிப்பதிவு பிரமாதம்.

இசை - இளையராஜா. பாடல்களில் சுருதி இல்லை.

திரைக்கதை வசனம் கமல், இயக்குநர் கமலின் ஆஸ்தான் நகைச்சுவை வித்துவான் சிங்கிதம் சீனிவாசராவ்.

-வாகினி-

# அணுவே அணுவே



அணு ஆயுதப்பாவனை மற்றும் உற்பத்தி ஆகியவற்றை மறைமுகமாக எதிர்த்துவரும் அமெரிக்க மற்றும் ஐரோப்பிய நாடுகள், தத்தமது நாடுகளில் இரகசியமாக அணு ஆலைகளை உற்பத்தி செய்து அணு ஆயுதங்களைத் தயாரித்துக்கொண்டிருக்கின்றன. இதேவேளை - ஐரோப்பிய நாடுகளில் தெரிந்தோ தெரியாமலோ பெருமளவு அணுக்கழிவுகள் தேங்கிப் போயிருக்கின்றன. கியூபிக் கணக்கில் யுரேனியம், புளுட்டோனியம் ஆகிய கழிவுகள் தேங்கிக்கிடக்கின்றன. 2020 ஆம் ஆண்டளவில் உலகத்தின் சக்தியானது - அணு ஆலைகளிலே முற்றுமுழுதாக தங்கிவிடும் எனக் கருதப்படுகிறது. 2003 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட வெள்ளை அறிக்கையில் சக்தியினுடைய தேவை அதிகரிப்பு காரணமாக அணுசக்தியும் பாவிக்கப்படலாம் எனக் கூறப்படுகிறது. ஜீ - 8 தொழில்நுட்ப நாடுகள் எல்லாம் அணுசக்தி பாவனைக்குத் தம்மை தயார்ப்படுத்தவுள்ளன.

# புதிய எம் பி 3 பிளேயர்



அப்பிள் கணினி நிறுவனத்தின் அடுத்த அற்புதமான வெளியீடு - எம்பி3 வகை சிறுகணினியாகும். 2005 ஆம் ஆண்டின் கிறிஸ்மஸ் வெளியீடாக இது வெளிவரவுள்ளது.

கறுப்பும், வெள்ளையும் கலந்த ஒரு வகையான சிறிய ரிமோட் வடிவில் வரவுள்ள இத்தகைய சாதனம் - சர்வ தேசச் சந்தையில் நல்ல இடத்தைப் பிடிக்கும் என்பதில் எந்த விதமான ஐயமுமில்லை.

இத்தகைய எம்பி3 பிளேயர் - இயபோன் மூலம்தான் கேட்கக் கூடியவாறு தயாராகிறது. முதன்முதலில் இத்தகைய சிறிய எம்பி3 பிளேயர் நியூயோர்க் நகரத்தில்தான் அறிமுகப்படுத்தப்படவுள்ளது. இந்தத் தயாரிப்பினுடைய மாதிரியை அப்பிள் கம்பனி நிறுவனத்தினர் நேரடியாக அதிபர் ஜோர்ஜ் புஷ்ஷிடம் காட்டி, அவருடைய பாராட்டைப் பெற்றிருக்கிறார்கள்.

இந்தக் கையடக்கமான எம்பி3 பிளேயரைக் கையாளுபவர்கள் - தலைமுதல் கால்வரை கறுப்புடையணிந்து இந்த வெள்ளை நிறமான பிளேயரை பாவிப்பார்கள் எனக் கூறப்படுகிறது.

# பங்கஸ் அரிசி



செயற்கை முறையில் தயாரிக்கப்பட்ட நெல்விதைகளை விதைத்த காரணத்தால், அரிசிகளில் பங்கஸ் பிடித்திருப்பதாக விஞ்ஞானிகள் கண்டு பிடித்திருக்கிறார்கள்.

அமெரிக்காவின் வடக்கு கரோலினாப் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் இந்த நோயினுடைய தாக்கம் மற்றும் பரவு திறன் ஆகியவற்றைத் தெளிவாக ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள். இந்தியாவிலும் வருடாவருடம் 266000 தொன் அரிசி இந்தப் பங்கஸ் நோயால் அழிந்து கொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது. ஜப்பானில் வருடாவருடம் 865000 ஹெக்டெயர் அரிசி இந்த நோயால் அழிந்து கொண்டிருக்கிறது.

பங்கஸ் - அரிசியில் காணப்படுகின்ற மாப்பொருளை நாடி வரவில்லை எனவும், அது அதில் காணப்படுகின்ற சிறிதளவு புரதச் சத்தையே தாக்குகிறது எனவும் விஞ்ஞானிகளால் கூறப்படுகிறது. இதனால் தான் பங்கஸ் இலகுவாக அரிசியைத் தாக்குகிறது.

# ஒரிஜினல் சாதனங்கள்

இலத்திரனியல் சாதனங்களில் கூடுதலான சாதனங்கள் தற்போது கூட்டுத்தயாரிப்பாகவே வருகின்றன. ஒன்றுமே ஒரிஜினலாக வருவதில்லை. ஆகவே ஒரிஜினல் தயாரிப்புகளைப் பார்ப்பது என்பது அரிதாகவே இருக்கிறது. டேவிட் கிளார்க் என்பவர் பல ஒரிஜினல் இலத்திரனியல் சாதனங்கள் பற்றிய தகவல்களைச் சேகரித்துப் புத்தகமாக வெளியிட்டிருக்கிறார். இந்தப் புத்தகத்தின் மூலம் பல தெரியாத ஒரிஜினல் இலத்திரனியல் சாதனங்களைப் பற்றிய தகவல்களைப் பெறக்கூடியதாக இருக்கும் எனக் கூறப்படுகிறது. இவர் 1970 ஆம் ஆண்டிலிருந்து உலக சந்தைக்கு வந்த பலதரப்பட்ட இலத்திரனியல் சாதனங்களின் தகவல்களைப் பொறுக்கி எடுத்து, அவை எவ்வாறு கூட்டுத்தயாரிப்பாக வெளிவருகின்றன என வெளியிட்டிருக்கிறார். இவருடைய தயாரிப்பு தொழில்நுட்பவியலாளர்கள் மத்தியில் நல்ல அபிப்பிராயத்தை ஏற்படுத்தியிருக்கிறது. இதன்மூலம் இவருக்கு இன்ரெல் கம்பனியின் பரிசும் கிடைத்துள்ளது.



# பழைய கட்டத் தொகுதி



ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட ஒரு கட்டடம் ஒன்று எகிப்து நாட்டில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதுபற்றிய ஆய்வுகளில் அமெரிக்க மற்றும் எகிப்து ஆய்வாளர்கள் ஈடுபட்டுக்கொண்டு வருகிறார்கள். இத்தகைய கட்டடத் தொகுதிக்குள் கல்லறை காணப்படுவதாகக் கூறப்படுகிறது. கி.மு.3600 இல் எகிப்தை ஆட்சி செய்த மன்னனால் இது அமைக்கப்பட்டிருக்கலாம் எனக் கூறப்படுகிறது. இந்தக் கட்டடம் பற்றிய ஆய்வுகளில் 2000 ஆம் ஆண்டே பார்பரா அடம்ஸ் என்ற எகிப்திய விஞ்ஞானி ஈடுபட்டிருந்தார். ஆனால் 2002 ஆம் ஆண்டில் இவர் ஆராய்ச்சியை அரைகுறையாக விட்டுவிட்டு இறந்ததால், இதனைப்பற்றிய தகவல்கள் இல்லாது போயின. இது கைரோ நகரத்திலிருந்து ஏறக்குறைய 600 கிலோ மீற்றர்கள் தொலைவில் காணப்படுவதாகக் கூறப்படுகிறது. இந்தக் கட்டடத் தொகுதிக்கு அருகில் பல பிரமிட்டுகளும் காணப்படுகின்றன.

# மிகுந்த எழுச்சியுடன் நடைபெற்ற கிளிநொச்சி மேதின நிகழ்வுகள்

(கிளிநொச்சி)

நேற்றுமுன்தினம் கிளிநொச்சியில் மே நாள் நிகழ்வு மிகுந்த எழுச்சியுடன் நடைபெற்றது.

கிளிநொச்சி - கரடிப்போக்குச் சந்தியிலிருந்து பிற்பகல் 2.50 மணிக்கு ஆரம்பமாகிய பேரணி - மாணவர்களின் அணிஇசையைத் தொடர்ந்து, தமிழீழத் தேசியத் தலைவரின் உருவப்படம் தாங்கிய ஊர்தி நகர்ந்து வர, அதனைத் தொடர்ந்து கிளிநொச்சி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் கலந்துகொண்ட மே தின ஊர்திகளும், பல நூற்றுக்கணக்கான மக்களும் பேரணியாக பிரதான வீதி வழியாக கிளிநொச்சி மத்திய மைதானத்தை வந்தடைந்தனர்.

இந்த நிகழ்வுகள் - கிளிநொச்சி மாவட்ட மேதின ஏற்பாட்டுக்குழுத் தலைவர் வீ.கே.திருலோகமூர்த்தி தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வின் பொதுச் சுடர் ஏற்றுதலைத் தொடர்ந்து - தமிழீழ தேசியக் கொடியை தமிழீழ நீதி நிர்வாகப் பொறுப்பாளர் பரா ஏற்றிவைத்தார். பின்னர் மேதினப் பிரகடனம் அரங்கில் வாசிக்கப்பட்டது.

அந்தப் பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

உலகத் தொழிலாளர்கள் காலா காலமாக நசுக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு வந்தார்கள். அனைத்துத் தொழிலாளர்களும் ஒன்றுபட்டு, உரிமைக் குரல் கொடுத்ததன் விளைவாக தொழிலாளர்களின் உரிமைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

அந்த நாள் இன்றைய மேநாளாக மலர்ந்திருக்கிறது. தமிழர் தாயகத்தின் இறைமையையும், தமிழ்த் தேசியத்தையும் வென்றெடுப்பதற்காக, தமிழர்களாகிய நாம் பல்வேறு வடிவங்களில் போராடினோம்.

எமது போராட்ட படிகளில் எம் பக்கம் முன்னோக்கிச் சென்றபோது, சர்வதேசத்தின் பார்வை எம் பக்கம் திரும்பியது. சமாதானத்துக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. கடந்த மூன்று வருடகால சமாதானப் பாதையில் சந்தித்தவை எவையுமல்ல.

எமது தேசத்தில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் என்ற உயரிய நோக்கத்துக்காக நாம் விட்டுக்கொடுப்புச் செய்துள்ளோம்.

பல பெறுமதிமிக்க உயிர்களை நயவஞ்சகத் தனமான சதியாளர்களிடம் இழந்திருக்கிறோம். இருந்தும் திறந்த மனதுடன் சமாதானத்தின் பால் எமக்குள்ள உறுதிப்பாட்டை வெளிப்படுத்தி வருகிறோம்.

இலங்கை அரசு ஆக்கபூர்வமான




எந்தவொரு நடவடிக்கையையும் முன்னெடுக்கவில்லை. அரசாங்கம் தமது கையாலாகத் தனத்தை அடிக்கடி வெளிக்காட்டி வருகின்றது.

இதன் உச்சக்கட்டமாக, தமிழர் போராட்டத் தின் நியாயப்பாட்டையும் உண்மைத் தோற்றத்தையும், அதை வெல்லப்பட வேண்டிய காலத்தின் கட்டாயத்தையும் - தனது எழுத்து மூலம் வெளிக்காட்டி நின்ற பத்திரிகையாளர் மாமனிதர் டி.சிவராம் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

சமாதானத்தில் எமக்கிருந்த சிறிய நம்பிக்கையும் இந்தப் பாதகச் செயலால் இழக்கப்பட்டுள்ளது.

சமாதானத்தின் பால் எமக்குள்ள உறுதிப்பாட்டைச் சர்வதேசம் நன்குணர்ந்துள்ளது. தொடர்ந்தும் சமாதானப் பாதையில் எமது பயணத்தைத் தொடர்வதில் எந்தவித பயனுமில்லை என்பதை மக்களாகிய நாம் உணர்ந்துவிட்டோம்.

காலம் கடத்தாது போராட வேண்டிய நிர்ப்பந்தத்துக்குள் நாம் தள்ளப்பட்டுள்ளோம். தமிழர் தாயகத்தை மீட்பதற்கான உறுதிப்பாட்டுடன் ஒன்றுபட்டு தமிழினமாக அணிதிரண்டுள்ளோம்.

தமிழீழத் தேசியத் தலைவரின் கரங்களைப் பலப்படுத்துவோம் என இன்றைய நாளில் உறுதிபூண்டுள்ளோம்.

போராட்டம் தான் எமது உரிமைகளை வென்றெடுப்பதற்கான ஒரே வழி என்பதால், தமிழர் தாயகத்தை மீட்டெடுப்பதற்கான நாளாக இன்றைய நாளைப் பிரகடனப்படுத்துகிறோம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வின் சிறப்புரையை நாடாளுமன்ற உறுப்பினர் மா.க.ஈழவேந்தன், கிளிநொச்சி அரச அதிபர் தி.இராசநாயகம், வலயக் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராஜா, தமிழீழ மகளிர் அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் தமிழ்விழி, கிளிநொச்சி மாவட்ட கமக்கார அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் சு.மனோகரன் உட்படப் பலரும் நிகழ்த்தினர்.

இறுதியில் - மேதினப் பேரணியில் பங்குகொண்ட 50 ஊர்திகளுக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டன.

# இன்றைய நாளில்... அன்று நிகழ்ந்தவை...

## மே - 03

1788 : உலகின் முதலாவது மாலைநேர தினசரியாக ''தஸ்டார்'' லண்டனில் இருந்து வெளிவர ஆரம்பித்தது.

1918 : உலக மகா யுத்தத்தின் போது மேற்கு முனையில் ஸோம் களத்தில் அமெரிக்கப் படைகள் மீது ஜேர்மனி இன்று மட்டும் 15 தொன் நச்சு வாயுவைப் பிரயோகித்தது.

✪ இன்று மட்டும் 36 ஜேர்மனிய போர் விமானங்களைச் சுட்டு வீழ்த்தியதாக பிரிட்டிஷ் அரசு அறிவித்தது.

1942 : விமானம் தாங்கிக் கப்பலில் இருந்து முதலாவது விமானப் போர் பவளக் கடலில் வைத்து ஜப்பானுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே நடந்தது. மூன்று நாட்கள் தொடர்ந்து நடந்த இந்தப் போரில் அமெரிக்காவின் ஒரு கப்பல் மூழ்கடிக்கப்பட, ஒரு கப்பல் பலத்த சேதமடைந்தது. ஜப்பான் தரப்பில் ஒரு கப்பல் மூழ்கடிக்கப்பட, இரு கப்பல்கள் பலத்த சேதமடைந்தன.

1944 : ரஷ்யப் படைகள் ரூமேனியாவுக்குள் நுழைந்தன.

1945 : ஜப்பான் தற்கொலை விமானத் தாக்குதலை ஆரம்பித்தது.

1955 : முதல் முறையாக அமெரிக்கா "அமைதிக்காக அணு" என்ற ஒப்பந்தம் ஒன்றை துருக்கி நாட்டோடு செய்துகொண்டது. இந்த ஒப்பந்தப்படி, துருக்கியில் அமைக்கப்படும் அணு ஆய்வு உலைக்குத் தேவையான செறிவூட்டப்பட்ட யுரேனியத்தை வழங்க வழி செய்தது.

1956 : அன்டாட்டிக்காவில் ஒரு புதிய மலைத்தொடர் கண்டுபிடிக்கப்பட்டது. 12000 அடிகளுக்கும் மேலான உயரத்தையும், இரண்டு சிகரங்களையும் கொண்டதாக இது காணப்பட்டது.

1960 : ஐரோப்பிய பொதுச் சந்தையில் அங்கம் வகிக்காத மற்ற ஐரோப்பிய நாடுகளுடன் தாராளமான வணிகத்தைச் செய்வதற்காக ''ஐரோப்பிய தடையற்ற வர்த்தகக் கழகம் (EFTA)'' உருவாக்கப்பட்டது. நோர்வே, சுவிட்சர்லாந்து, அவுஸ்ரேலியா, பின்லாந்து, ஐஸ்லாந்து என்பன இதன் உறுப்பு நாடுகளாகும்.

1969 : சென்னை மாநிலத்துக்கு இன்று "தமிழ்நாடு" என்று பெயர் சூட்டப்பட்டது.

1980 : எவரெஸ்ட் சிகரத்தை அடைவதற்கான மிக அபாயகரமான வழியான வடகிழக்குப் பாதையூடாக, ஜப்பானைச் சேர்ந்த யாகவோ காட்டோ சிகரத்தைச் சென்றடைந்தார்.

1981 : பங்களாதேஷ் அதிபர் ஜியா - உல் - ரஹ்மான் கொல்லப்பட்டார்.

1988 : பிரிட்டிஷ் உளவுத் துறையில் உயர் பதவியில் இருந்துகொண்டே, ரஷ்யாவின் ஒற்றராகச் செயற்பட்டுவந்த கிம்பில்ஃபி மொஸ்கோவில் காலமானார்.

1990 : சோவியத் குடியரசு நாடுகளில் ஒன்றான ''லாட்வியா'' சோவியத் யூனியனில் இருந்து பிரிந்து விடுதலை அடைந்ததாக அறிவித்தது.

✪ உலக சூரிய தினமாகும்.

✪ ஜப்பானில் அரசியல் சாசனதினம் கொண்டாடப்படுகிறது.

✪ சர்வதேச பத்திரிகைச் சுதந்திரதினம்.

தொகுப்பு - சந்துரு

# புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் பயிற்சிநெறியும், சான்றிதழ் வழங்கலும்

(கிளிநொச்சி)

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையின் கீழ் இயங்கிவரும் வெண்புறா நிறுவனம் - யுனிசெவ் நிறுவனத்துடன் இணைந்து, பௌதீக ஆற்றுப்படுத்தல் மேம்பாட்டுப் பயிற்சிநெறி வகுப்புக்களை 28 ஆம் திகதி தொடக்கம் 30 ஆம் திகதி வரை மூன்று தினங்கள் கிளிநொச்சியிலுள்ள வெண்புறா செயற்கை உறுப்பு உற்பத்தித் தொழில்நுட்ப நிறுவனத்தின் கேட்போர் கூடத்தில் நடத்தியது.

பயிற்சியாளர்களுக்கான விரிவுரைகளையும், பயிற்சிகளையும் உளவளத்துணை ஆற்றுப்படுத்தல் போதனாசிரியர் தங்கத்துரை வழங்கினார்.

இறுதி நாளான கடந்த சனிக்கிழமை - பயனாளிகளுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் வெண்புறா நிறுவனப் பணிப்பாளர் சுந்தரம், நிர்வாக உத்தியோகத்தர் சந்திரசேகரம் கலந்து சிறப்பித்தனர்.

இப்பயிற்சி நெறியில் 16 பயனாளிகள் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.





# பால் பதனிடும் தொழிற்சாலைக்கு கிளிநொச்சியில் அடிக்கல் நாட்டு விழா

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் அனுசரணையுடன் பால் பதனிடும் தொழிற்சாலை ஒன்று நிறுவப்படவுள்ளது.

இந்தத் தொழிற்சாலைக்கான அடிக்கல் நேற்றுமுன்தினம் நாட்டப்பட்டது. இந்த நிகழ்வில் - அடிக்கல்லை கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் இராசநாயகம், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் கரிகாலன், கிளிநொச்சி மாவட்ட விசேட ஆணையாளர் ஆகியோர் நாட்டி வைத்தனர். இந்தத் தொழிற்சாலைக்ற கட்டடத்துக்கான நிதியுதவியை கனடாவில் வசிக்கும் பேராசிரியர் இலகுப்பிள்ளையும் அந்த நாட்டு மக்களும் வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மாமனிதர் சிவராம் கொலைக்கு வன்னி ஊடகவியலாளர் கண்டனம்

(கிளிநொச்சி)

ஊடகவியலாளர் சிவராம் கடத்திப் படுகொலை செய்யப்பட்டதை வன்னி ஊடகவியலாளர் சங்கம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

இந்தப் படுகொலையைக் கண்டித்து - வன்னி ஊடகவியலாளர் சங்கம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

ஊடகவியலாளர் தர்மரத்தினம் சிவராம் கடத்தப்பட்டு கொலைசெய்யப்பட்டார் என்பதை அறிந்து அதிர்ச்சியடைந்தோம். இந்தக் கொலையை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

டெய்லிமிரர், வீரகேசரி ஆகிய பத்திரிகைகளின் கட்டுரையாளராகிய சிவராம் - தமிழ்நெற் இணையத்தள ஆசிரிய குழு உறுப்பினருமாவார்.

இவர் துணிகரமாகக் கருத்துக்களை வெளியிட்டு வந்தார். சுனாமி கடல் அனர்த்தத்தின்பின் நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி நிலையின்போது, இந்தக் கொலை இடம்பெற்றதன் மூலம் - இந்த நாட்டின் ஊடக சங்கத்துக்கும், பேச்சுச் சுதந்திரத்துக்கும் பெரிய அடி விழுந்துள்ளது.

சிவராமைக் கொலை செய்தவர்களை சட்டத்தின் முன் கொண்டு வருவதற்கு அரசாங்கமும், அதன் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த அதிகாரிகளும் உடன் நடவடிக்கை எடுக்க முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றோம் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சின்னஞ்சிறு செய்திகள்

## வாகனங்கள் அன்பளிப்பு

(மன்னார்)

மன்னார், மடு ஆகிய கல்வி வலயங்களுக்கு யுனிசெவ் நிறுவனத்தால் வாகனங்கள் வழங்கப்பட்டன.

மன்னார் கல்வி வலயத்துக்கு எல்வ் ரக வாகனம் ஒன்றும், மடு கல்வி வலயத்துக்கு பிக்கப் ரக வாகனமும் வழங்கப்பட்டன.

இதேவேளை இந்த இரு கல்வி வலயங்களுக்கும் இரண்டு மில்லியன் ரூபா பெறுமதியான பாடசாலை உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அடிப்படை வசதிகளின்றி பூநகரி மருத்துவமனை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி - பூநகரி மருத்துவமனை அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் மிக நீண்டகாலமாக இயங்கி வருகின்றது.

இந்த மருத்துவமனையில் நிரந்தர மருத்துவர் இன்மை, ஏனைய ஊழியர் இன்மை, நோயாளர் காவு வண்டியின்மை போன்ற அடிப்படை வசதியின்மையால், சிகிச்சை பெறவரும் நோயாளர்கள் வேறு மருத்துவமனைக்கே செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

சிந்தனைக்கு
"சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்"
திருக்குறள்

## நமது நோக்கு

# பொறுமையின் எல்லையில் பொங்கி எழும் தமிழினம்...!

'பொறுத்தது போதும் பொங்கி எழுவோம்' என வானுயரக் கோஷமிட்டு, பேரணியாய்த் திரண்டு தம் உள்ளத்து உணர்வுகளை வெளிப்படுத்துமளவிற்கு தமிழ் மக்கள் பொறுமையின் எல்லைக்கே சென்றுவிட்டார்கள் என்பதை நேற்று முன்தினம் நடைபெற்ற மேதின நாள் நிகழ்வுகள் துல்லியமாக எடுத்துக் காட்டிவிட்டன என்றே கூறவேண்டும்.

மூன்றாண்டுக்கும் மேலான காலச் சமாதான சூழல் தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகளுக்கேற்ப அர்த்தமுள்ள எந்த விடயத்தையும் நிறைவேற்றிவைக்கவில்லை என்பது ஒரு புறமிருக்க- வரட்டு நம்பிக்கைகளை மட்டும் வளர்த்தபடி இதுவரை காலமும் ஏதாவது அற்புதம் நிகழக்கூடும் எனக் காத்திருந்து ஏமாந்ததில் ஒருவிதமான விரக்தி நிலைக்கும் தள்ளப்பட்டுள்ளனர் என்பதையே மே தினத்து கோஷங்கள் அடையாளப்படுத்தி நிற்கின்றன.

இந்த மக்கள் சமாதானத்தின் பலாபலன்கள் குறித்து நிறையக் கனவுகளை வளர்த்துக் கொண்டவர்கள்.

நியாயமற்றதும், தமது வாழ்வை முற்றிலும் சிதைத்துவிட்டதுமான போரைத் தம்மீது திணித்த பேரினவாத ஆட்சியினரது, அரச பயங்கரவாதத்தின் பன்முகப் படுத்தப்பட்ட அடக்குமுறை அழுத்தங்கள், கடந்த சில தசாப்தங்களாகவே தமிழ் மக்களின் வாழ்வியல் உரிமைகளை முற்றாகப் பறித்துவிட்டுள்ள சூழ்நிலையில், இடைவந்த சமாதானம் குறித்த எதிர்பார்ப்புகள் யாவும் வெறும் தூரத்துப் பச்சையாகிவிட, தமிழ் மக்கள் இனி இழப்பதற்கு எதுவுமேயில்லை. ஏமாற்றுவதற்கும் முடியாது என்ற இறுதிக்கட்ட முடிவுக்கு வந்துவிட்டார்கள் என்பதையே விடுதலைப் போராட்டத்தை துரிதப்படுத்துமாறு கோரி தேசியத் தலைவருக்கு விடுத்த மே தினப் பிரகடனத்தின் வாசகங்கள் பிரதிபலிப்பதாக உள்ளன.

தமிழ் மக்களின் தேசிய அபிலாஷைகள் நிறை வேற வேண்டுமாயின், தமிழர் தாயகத்தின் இறை மையை மீட்க வேண்டுமாயின், சமாதானத்தின் பேரால் நியாயமான தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கையின் பேரால், சமாதானத்தை வலியுறுத்தி அனுசரணை வழங்கவந்த சர்வதேச சமூகத்தின் முயற்சிகளுக் குக் கொடுத்த மதிப்பின் பேரால், இடைநிறுத்தப்பட்ட விடுதலைப் போராட்டத்தை மீண்டும் துரிதமாக்கப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது என்பதை உரக்கத் தெரிவித்த மக்களின் மே தின கோஷமானது- மேற்குறிப்பிட்ட அனைத்து விடயங்கள் மீதான விருப்பு, நம்பிக்கை, எதிர்பார்ப்பு, விசுவாசம் எல்லாவற்றையும் அவர்கள் இழந்துவிட்டார்கள் என்ற எண்ணப்பதிவையே அனைவர் மனதிலும் ஏற்படுத்திய தெனலாம்.

போர்க்காலக் கொடுமைகளைவிடவும் சமாதான காலப்பேய்க்காட்டல் நடவடிக்கைகள்தான் மக்களை ஏமாளியாக்கி வருகிறது என்பதே உண்மையாகும்.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு யுத்தத்தின் மூலம் தீர்வுகாண முடியாது என தாம் நம்புவதாக வாய்கிழியப் பேசிவரும் ஜனாதிபதி- ஒரு பெரும் போருக்கு தேவையான பெருந்தொகை இராணுவ ஆயுதங்கள், கருவிகள் மற்றும் போர்த்தளபாடங்களை கொள்வனவு செய்வதில் காட்டும் தீவிரத்தைப் பார்க்கும்போது இனப்பிரச்சினையை அவர் எந்த வகையிலும் அமைதிப் பேச்சுக்கள் மூலம் தீர்க்கும் மனோபாவம் கொண்டவராக இருக்கப் போவதில்லை என்ற யதார்த்தத்தை எல்லோராலும் புரிந்து கொள்ள முடியும்.

சுனாமி அனர்த்த நிவாரணப் பணிகளை நீதியாக மேற்கொள்ள அத்தியாவசியமானது என உள்நாட்டில் பெரும்பாலான அமைப்புகள், நிறுவனங்கள், கட்சிகள் யாவும் வலியுறுத்திவரும் பொதுக் கட்டமைப்புக் குறித்த திட்டத்தை அது ஒரு மனிதநேயப் பணியுடன் சம்பந்தப்பட்டது என்பதை அறிந்திருந்தும் கூட இதனை நடை முறைப்படுத்த மனமின்றி காலம் கடத்தும் ஜனாதிபதியா லும் அரசாலும், இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வை போச்சுவார்த்தை மூலம் ஏற்படுத்த முடியும் என எவராலும் நம்பமுடியுமா?

தமிழ் மக்கள் அதற்கு இனிமேலும் தயாராக இல்லை என்பதே மே தினக் கோஷங்களின் உள்ளடக்கக் கருத்தும் அது உணர்த்தும் செய்தியுமாகும்.

தமிழ்த் தேசியத்தின் தனித்துவ அடையாளத்தை, தமிழர்தாயகப்பிரதேசத்தில் தமிழ்மக்களுக்குரிய பூர்வீக உரிமையை, அங்கீகரிக்க மறுக்கும் பௌத்த சிங்கள பேரினவாத அரசியல் தலைமைகளுடன் சமாதானப் பேச்சுக்களை புரிந்துணர்வுடன் கூடிய நம்பிக்கையுடன் மேற்கொள்ள முடியும் என தமிழ் மக்களால் இனியும் நம்புவது முடியாத காரியமேயாகும்.

## நாடும் நடப்பும்




## 'ஊர்சுற்றி'யார் பார்வையில்...

# சிவராமின் விடுதலைக்கனவு விரைவில் நனவாகும்!

ஜே.வி.பி என்ற மக்கள் முன்னணி இலங்கையில் ஆயுதப் புரட்சி மூலம் ஆட்சியைப் பிடிப்பதற்காக இரண்டு தடவைகள் முயற்சி செய்தது

ஒரு ஜனநாயக நாட்டில் ஜனநாயக முறையில் தெரிவு செய்யப்பட்ட ஜனநாயக ஆட்சியை ஆயுதக் கிளர்ச்சி மூலம் கவிழ்த்து ஆட்சியைக் கைப்பற்ற ஜே.வி.பி ஆயுதம் ஏந்திப் போராடியது.

இரண்டு தடவையும் இந்தக் கிளர்ச்சி முறியடிக்கப்பட்டது. ஆனால் இந்தக் கிளர்ச்சிகளால் ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டனர். இவர்களில் பெரும்பாலானோர் சிங்கள இளைஞர்கள்.

இப்பொழுது சந்திரிகா அம்மையாரின் அரசியல் கட்சியுடன் கூட்டுச்சேர்ந்து ஜே.வி.பி ஆட்சிபீடத்திலிருக்கிறது.

இதேசமயம் தேசப்பற்றுள்ள இயக்கம் ஒன்றையும் ஜே.வி.பி தனது ஓர் அணியாக்கிக்கொண்டிருக்கிறது.

ஜே.வி.பியும், தேசப்பற்றுள்ள இயக்கமும் தங்களை ஜனநாயக அமைப்புக்கள் என்றும் தேசத்தைப் பாதுகாப்பதே தங்கள் இயக்கத்தின் இலட்சியம் என்றும் கூறிவருகின்றன.

இலங்கையில் முதல்முதலாக ஆயுதம் ஏந்தி இலங்கையில் ஜனநாயக ஆட்சிக்கு எதிராக கிளர்ச்சி செய்தது ஜே.வி.பிதான். தங்கள் ஆயுதங்கள் மூலம் பொதுமக்களை ஆயிரக்கணக்கில் கொலைசெய்து இலங்கையில் பயங்கரவாதத்தைத் தோற்றுவித்தவர்களும் ஜே.வி.பியினர்தான்.

ஜே.வி.பியின் ஆயுதக் கிளர்ச்சியை அடக்குவதென்று பொதுமக்கள் மீது அத்துமீறி அடக்குமுறையைப் பிரயோகித்து ஆயிரக்கணக்கில் அரசபடையினர் பயங்கரவாதமாக பலியெடுத்ததும் இந்த ஆயுதக் கிளர்ச்சியினால்தான்.

இலங்கையில் முதன்முதலில் பயங்கரவாதத்தைத் தோற்றுவித்த ஜே.வி.பி இன்று ஜனநாயகவாதிகளாகவும், தேசப்பற்றுள்ளவர்களாகவும் பறையடித்துத் திரிகிறார்கள்.

இதற்காக தமிழீழ விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதிகள் என்று கதிர்காமரோடு இணைந்தும் பரப்புரை செய்கிறார்கள்.

இது மட்டுமல்ல சிங்கள, ஆங்கில ஊடகங்களுடன் சேர்ந்து விடுதலைப் புலிகள் என்றாலே சிங்களப் பொதுமக்கள் பயந்து நடுங்கவும், வெறுத்து ஒதுங்கவும் கூடியதாக பிரசாரம் செய்கின்றனர்.

தமிழ் மக்கள் தங்கள் உரிமைகளுக்காகக் குரல் கொடுக்கவும் தமிழ் மக்கள் ஜனநாயக இலங்கையில் தமது பாரம்பரிய தாயகத்தில் சுதந்திரமாக, சுயநிர்ணய உரிமையுடன் வாழ்வதற்கு சமஷ்டி ஆட்சி அமைப்பு வேண்டுமென்று ஜனநாயக முறையில் குரல் கொடுத்தனர்.

தமிழர்கள் நாட்டைப் பிரிக்கப் பார்க்கிறார்கள் என்று சிங்கள பௌத்த மேலாண்மை பிரிவினை எனக் கூச்சலிட்டது.

தமிழ் மக்கள் சமஷ்டி ஆட்சி முறையில் சுயநிர்ணய உரிமை கோரி, அதை அடைவதற்கு காந்திய வழியில் சாத்வீகப் போராட்டம் நடத்தியபோது, தமிழர்கள் நாட்டைத் துண்டாடப் பார்க்கிறார்கள். இவர்கள் தேசத்துரோகிகள் என்று தமிழர்கள்மீது குற்றம் சாட்டினார்கள்,

இத்துடன் "நாட்டைத் துண்டாடமுனையும் தமிழர்களுக்கு" எதிராக சிங்களவர்களைத் தூண்டிவிட்டார்கள். இதன்விளைவாக 1958 முதல் 1983 வரை தமிழ் மக்களுக்கு எதிராக இனக்கலவரங்கள் தூண்டிவிடப்பட்டன.

இவற்றைத் தொடர்ந்து தமிழர்கள் நாட்டைத் துண்டாடப் பார்க்கிறார்கள் என்ற கோஷம் இலங்கையிலிருந்தே தமிழ் இனத்தை அழித்தொழிக்கும் நடவடிக்கைகளாக மாறியது!

இந்த நிலையில்தான் தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தினார்கள். விடுதலைப் புலிகள் துணிச்சலுடன் வீரப்போர் புரிந்து தமிழ் மக்களையும் தமிழ் மண்ணையும் பாதுகாத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இவை பற்றியெல்லாம் சங்கரியாருக்குத் தெரியாதா அல்லது அப்போது எம்.பி. பதவி கிடைத்த சுகத்தில் இவற்றை மறந்திருந்தாரோ?

இப்பொழுது சிவராம் கொலைக்கு தமிழ் ஊடகங்கள்தான் காரணம் என்று சங்கரியார் புலம்பியிருக்கிறார்.

விடுதலைப் புலிகள் ஆயுதம் ஏந்திய பின்னர்தான் தமிழ் இனப்படுகொலை நிறுத்தப்பட்டதென்பதையும், அதற்கு முன் எத்தனை அப்பாவிகள் படுகொலை செய்யப்பட்டனர் என்பதையும் சங்கரி நினைவுபடுத்தமாட்டார்.

தமிழரசுக் கட்சி பின்னர் தமிழர் கூட்டணியும் சாத்வீகப் போராட்டம் நடத்தியபோதுதான் தமிழ் மக்களுக்கெதிராக துவேஷப் பிரசாரம் செய்து இனக்கலகங்களைத் தூண்டி இனப்படுகொலையிலிறங்கியது பேரினவாதம்.

விடுதலைப் புலிகள் ஆயுதம் ஏந்தி தமிழ் இனப்படுகொலையைத் தடுத்தபின் புலிகளைப் பயங்கரவாதமாகப் பிரசாரம் செய்து, உலகப் பயங்கரவாத ஒழிப்பில் புலிகளையும் ஒழிக்கலாமெனத் திட்டமிட்டது பேரினவாதம்.

தமிழ்ப்புத்திஜீவிகள், வெளிநாடுகளில் வர்த்தகத்திலும், கல்வியிலும் மற்றும் துறைகளிலும் நல்ல நிலையிலுள்ள தமிழர்கள் எல்லோரும் புலிப் பயங்கரவாதிகளுக்கு நிதி உதவி செய்வதாக தி ஐலன்ட் என்ற இனவாதப் பத்திரிகை தொடர்ச்சியாகப் பெயர் விபரங்களை வெளியிட்டுவந்தது. சங்கரிக்குத் தெரியாதா அல்லது இதைப் பார்த்து சங்கரி சந்தோஷப்பட்டாரா?

ஓராண்டு முன்னரோ அதற்கும் சற்றுக் கூடுதலாகவோ ஊடகவியலாளர் சிவராம் புலிப் பயங்கரவாதி என்று கொழும்பிலிருந்து வெளிவரும் அரச ஆங்கிலத் தினசரி வேண்டுமென்றே முதல் பக்கத்தில் படத்துடன் வெளியிட்டிருந்தது சங்கரிக்குச் சந்தோஷம் கொடுத்ததோ?

தமிழர்கள் என்றால் நாட்டைப் பிரிப்பவர்கள் என்று முன்பு சிங்களவர்களுக்கு துவேஷத்தை ஊட்டிய சிங்களப் பேரினவாதிகள் இப்போது தமிழர் என்றால் பயங்கரவாதப் புலிகள் என்று விஷத்தை ஊட்டுகிறார்கள்.

மார்க்ஸியம் படித்து மார்க்ஸியவாதிகளுடன் பழகி, பெரும்பான்மைச் சிங்கள பௌத்த புத்திஜீவிகளுடன் நட்புறவு கொண்டு பழகி, தமிழ் இளைஞர்கள் ஆயும் ஏந்தியபோது, தாமும் ஒரு குழுவுடன் இணைந்து ஆயுதம் ஏந்தி, தமிழ் இனவிடுதலைக்காகப் போராடி, பின்னர் அரசியலில் அந்த இயக்கம் ஈடுபட்டதும், அந்தக் கட்சியின் பொறுப்பு வாய்ந்த பதவி ஏற்றுப்பின்னர் இயக்கங்கள் பற்றி அறிந்து அதைவிட்டு விலகி ஊடகவியலாளராகி மக்களுக்கு வழிகாட்டியாகவும் சேவை புரிந்தவர் சிவராம்.

சிங்களப் பெரும்பான்மை அரசியல் தமிழீழப் போராட்டமென எல்லா வழிகளையும் அறிந்து இனித் தமிழ் மக்கள் தமது சுதந்திரத்துக்காகப் போராடி வெற்றி யீட்டுவதே ஒரேவழி. அதுவும் தலைவர் பிரபாகரன் தலைமையில்தான் தமிழீழம் பெறமுடியும் என்பதை உணர்ந்து, உணர்த்தி வந்தவர் அறிவுஜீவி தர்மரத்தினம் சிவராம்.

சங்கரிக்கும் கோடரிக் காம்புகளுக்கும் சிவராமைப் புரிந்துகொள்ளமுடியாது.

ஏனெனில் சிவராம் சுதந்திர தமிழீழத்தைக் காணவிரும்பிய தன்மானமிக்க சுதந்திர அறிவுஜீவித் தமிழன்!

சிவராமின் கனவு விரைவில் நனவாகும்!



## கும்பம்

கும்பராசி அன்பர்களே!

கடந்த சில மாதங்களாக நீங்கள் கண்ட இன்னல்கள் மறையும். இன்னும் சிலமாதங்களில் நீங்கள் பல்வேறு முன்னேற்றங்களைக் காணப் போகிறீர்கள். ஆண்டின் தொடக்கம் சுமாராக இருந்தாலும் கவலை கொள்ளவேண்டாம். ராகு உங்கள் ராசிக்கு 2 ஆம் இடத்தில் ஆண்டு முழுவதும் இருப்பதால், அவர் பொருளாதாரப் பிரச்சினையை ஏற்படுத்துவார். கேது 8 ஆம் இடத்தில் இருப்பதால் உங்கள் முயற்சியில் தோல்வியைச் சந்திக்கலாம். சனிபகவான் தற்போது 5 ஆம் இடத்தில் உள்ளார்.

அவர் குடும்பத்தில் பிரச்சினையை உருவாக்கலாம். அப்படிப்பட்ட சனி வருகிற ஜூன் மாதம் 26 ஆம் திகதி 6 ஆம் இடத்துக்குச் செல்கிறார். இது சிறப்பான இடம். அதன்பின் உங்கள் வாழ்க்கை வளர்ச்சிப்பாதையை நோக்கி நகரும். பொருளாதாரவளம் மேம்படும். குருபகவான் தற்போது 8 ஆம் இடத்தில் இருப்பதால், பொருளாதார சரிவைக் கொண்டுவரலாம். அவர் செப்ரெம்பர் 19 ஆம் திகதி 9 ஆம் இடத்துக்கு மாறுகிறார். அதன்பின் அவர் பல்வேறு நன்மைகளை நிகழ்த்துவார்.

மேற்கண்ட நிலையில் இருந்து பார்க்கும்போது, ஆண்டின் தொடக்கத்தில் முக்கிய கிரகங்கள் எதுவுமே சாதகமாக இல்லைத்தான். ஆனாலும் செப்ரெம்பர்வரை குருவின் 7 ஆம் இடத்துப் பார்வை உங்கள் ராசிக்கு 2 ஆம் இடத்தில் விழுகிறது. இதன் மூலம் எந்தப் பிரச்சினையையும் முறியடித்து வெற்றி காண்பீர்கள். மேலும் சூரியன், செவ்வாய், சுக்கிரன், புதன், சந்திரன் ஆகிய கிரகங்கள் அவ்வப்போது நற்பலனைக் கொடுப்பார்கள். இனி விரிவான பலனைக் காணலாம்.

ஆண்டின் தொடக்கத்தில் உங்கள் முயற்சியில் சிற்சில தடைகள் வரத்தான் செய்யும். அதைப் பொருட்படுத்தாமல் காரியத்தில் கண்ணாக இருந்தால் வெற்றி பெறலாம். ஜூன் மாதத்தில் இருந்து காரிய அனுகூலம் எளிதாகும். பணப்புழக்கம் அதிகரிக்கும். தேவையான பொருட்களை வாங்கிக் குவிக்கலாம். வாழ்க்கையில் வசந்தம் வீசும். மதிப்பு, மரியாதை, கௌரவம் மேம்படும். உங்களைச் சுற்றி இருப்பவர்கள் ஓகோ என்று உங்களைப் புகழ்வார்கள்.

குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். கணவன், மனைவி இடையேயிருந்த பிரச்சினைகள் அகன்று ஒற்றுமை ஏற்படும். ஜூன் மாதத்துக்குப் பிறகு பிரிந்த குடும்பம் ஒன்றுசேரும். உறவினர்கள் மத்தியில் அந்நியோன்யம் இருக்கும். திருமணம் போன்ற சுப நிகழ்ச்சி நடக்கும். பல ஆண்டுகளாக தடைப்பட்டுவந்த திருமணம் செப்ரெம்பருக்குப் பிறகு கண்டிப்பாகக் கைகூடும். அது நல்ல வரனாக அமையும். புதிய வீடு, சொத்து போன்றவை வாங்கலாம். குழந்தைப் பாக்கியம் கிடைக்கும். பெண்கள் மூலம் அதிக பலனை எதிர்பார்க்கலாம்.

உத்தியோகம் பார்ப்பவர்கள் முன்னேற்றப் பாதையில் செல்வர். ஆனால் ஆண்டின் தொடக்கத்தில் அதிகமாக உழைக்கவேண்டியிருக்கும். மேலதிகாரிகளிடம் அனுசரித்துப் போகவும். செப்ரெம்பருக்குப் பிறகு பிற்போக்கான நிலை மாறும். ஆற்றல் மேம்படும். அதன்மூலம் நல்ல பதவி கிடைக்கும். வருமானத்துக்குக் குறை இருக்காது. புகழோடு பெருமையும் கிடைக்கும். விரும்பிய இடத்துக்கு மாற்றம் பெறலாம். வேலை நிமித்தமாக குடும்பத்தை விட்டுப் பிரிந்தவர்கள் இனி ஒன்று சேருவர்.

வியாபாரிகள் தற்போது இருந்து வந்த பின்தங்கிய நிலையில் இருந்து விடுபடுவர். ஜூன் மாதத்துக்குப் பிறகு தொழிலில் விழிப்புணர்ச்சி காண்பர். லாபம் அதிகரிக்கும். புதிய வியாபாரம் நல்ல அனுகூலத்தைக் கொடுக்கும். வியாபாரத்தை விரிவுபடுத்த நல்ல காலம். வேலையின்றி இருப்பவர்கள் புதிய தொழிலைத் துணிந்து தொடங்கலாம். கேதுவால் எதிரிகள் இடையூறு அவ்வப்போது வரும். ஆனால் அதை முறியடித்து இருக்கும் இடம் தெரியாமல் ஆக்கி விடுவீர்கள். கூட்டாளிகளிடையே ஒற்றுமை ஏற்படும்.

கலைஞர்கள் நல்ல பணப்புழக்கத்தோடு இருந்தாலும், ஒருவித மன நெருடல் இருந்திருக்கும். புதிய ஒப்பந்தங்கள் கிடைத்து வந்தாலும் புகழ், பாராட்டு இல்லையே என்ற வேதனை மனதில் புதைந்திருக்கும். செப்ரெம்பருக்குப் பிறகு புகழ், பாராட்டு போன்றவை கிடைக்கும். சிலர் அரசிடமிருந்து விருதைப் பெறலாம். அரசியல்வாதிகள், பொதுநல சேவகர்கள் ஆண்டின் பிற்பகுதியில் மேன்மை காண்பர்.

மாணவர்கள் அதிக சிரத்தை எடுத்துப் படிக்கவேண்டி இருக்கும். ஆனாலும், உழைப்புக்கு ஏற்ற பலன் கிடைக்கும். அடுத்த கல்வியாண்டு உங்களுக்கு மிகவும் சிறப்பாக இருக்கும். சிலர் வெளிநாடு சென்று படிக்கும் வாய்ப்பைப் பெறுவர்.

விவசாயிகள் தற்போது நல்ல வளத்தோடு காணப்படுகிறீர்கள். புதிய சொத்து வாங்க வாய்ப்புண்டு. சிலர் நவீன விவசாயத்தைப் பயன்படுத்தி முன்னேற்றம் காண்பர். கால்நடைகள் நல்ல வளத்தைத் தரும். கூலி வேலை செய்பவர்கள் சுய தொழிலில் இறங்கும் காலம் உருவாகும்.

பெண்கள் திருப்திகரமாக இருப் பர். ஜூன் மாதம்வரை விட்டுக் கொடுத்துப் போகவும். அதன்பின் வாழ்க்கையில் குதூகலம் ஏற்படும். குடும்பத்தில் உங்களுக்கு தனி கௌரவம் உண்டாகும். பிள்ளைகளால் பெருமை கிடைக்கும். பிறந்த வீட்டிலிருந்து பொன், பொருட்கள் வந்து சேரும். வேலை செய்யும் பெண்கள், வியாபாரம் செய்யும் பெண்கள் நல்ல வளத்தைக் காண்பர்.

உடல் நலத்தைப் பொறுத்தவரை சுமாராகவே இருக்கும். கேது சாதகமற்ற இடத்தில் இருப்பதால் பித்தம், மயக்கம், சளி போன்ற இடர்பாடுகள் வரலாம். உங்களிடம் இருந்துவந்த மந்த நிலை செப்ரெம்பருக்குப் பிறகு மறையும்.

**பரிகாரம்** :- ராகு கேதுவுக்கு பரிகாரம் செய்யுங்கள். பாம்புப் புற்றுள்ள கோவிலுக்குச் சென்றுவாருங்கள். கணவரை இழந்து வாடும் மூதாட்டிகளுக்கு இயன்ற உதவி செய்யுங்கள். செப்ரெம்பர்வரை தட்சிணா மூர்த்திக்கு அர்ச்சனை செய்யுங்கள்.

**கல்வியியல்**

**ஆர்.கே.மேனன்**

# தமிழ் மாணவர்களின் கல்விக் கட்டமைப்புக்கு எதிராக மறைமுக சதிகள் விஸ்வரூபம் எடுக்கின்றன



**எமது தமிழ் கஷ்டப்பிரதேசப் பாடசாலைகளில் இருந்து எழுதக் கூட கதிரை, மேசை இல்லாத நிலை உள்ளது. அடிப்படைப் பௌதீக வளங்களே இல்லாத எமது பிரதேசத்தில் எப்படி புதிய கல்விச் சீர்திருத்தம் வெற்றியளிக்கப் போகிறது?**

தமிழ் மாணவர்களின் கல்விக் கட்டமைப்புக்களில் சில மறைமுகமான சதிகள் அண்மைக் காலங்களில் இடம் பெற்றுக் கொண்டு வருகின்றது. ஏற்கனவே எமது கல்வியியல் வளர்ச்சிப் போக்குகள் மிகவும் மந்தகரமாக இருக்கும் நிலையில், எதிர் காலத்தில் எம் மாணவர்களைப் பாரிய பின்னடைவுக்குக் கொண்டு செல்லும் அளவுக்கு சில மறைமுக சதிகள் கற்பித்தல் என்கின்ற செயற் திட்டத்தின் ஊடாக மேற்கொள்ளப் பட்டு வருகின்றது.

எந்த ஒரு உற்பத்தியிலும் உள்ளீட்டிற்கேற்ப வெளியீட்டை ஓரளவு உடனடியாக அனுமானிக்கக் கூடியதாக இருக்கும். ஆனால் மானிட திறன்களோடு கூடிய கல்வியியல் விருத்தியில் தான் உடனடி வெளியீட்டை அனுமானிக்க முடியாது. இதனால் தான் அன்று தொட்டு இன்று வரை கல்வியியல் அமைப்பில் பல பிரச்சினைகளும், பல மாற்றங்களும் ஏற்பட்டுக் கொண்டு வருகின்றது.

அந்த வகையில் அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய கல்விச் சீர்திருத்தத்தை எடுத்துக் கொண்டால், இது முன்பிருந்த கல்வியியல் வரைமுறைக்கட்டமைப்பில் இருந்து பல வழிகளிலும் பாரிய மாற்றங்களுக்கூடாக இது புகுத்தப்பட்டுள்ளது.

இது சரியானதா? ... பொருத்தமானதா? அப்படியானால் ஏன் இப்போது கல்வியில் வரைவு வீழ்ச்சி கண்டுள்ளது? என்கின்ற பல சர்ச்சைகள் கல்வியியலாளர்கள் மத்தியில் எழுகின்றது. இது ஒரு புறமிருக்க சுருக்கமாக புதிய கல்விச் சீர்திருத்தம் பற்றி பல வகைப்பட்ட ஆய்வுகள் வாயிலாக அனுமானிக்கப்பட்ட ஒரு கருதுகோள் யாதெனில் –

புதிய கல்விச் சீர்திருத்தம் சரியானதாகவும், வெற்றியளிக்கக் கூடியதாகவும் இருக்க வேண்டுமென்றால், அதில் கூறப்பட்ட பௌதீக வளங்கள் அனைத்தும் முறையான வகையில் வகுப்பறையில் பயன்படுத்த வேண்டும். தேசிய குறிக்கோள் ஒன்பதையும் அனுசரித்து பல வகையான வித்தியாசமான கற்பித்தல் முறைகளுக்கூடான போதிய பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் மாத்திரமே வகுப்பறைக்குள் பிரவேசிக்க வேண்டும். இப்படி மிக அவதானத்துடன் இந்த இரண்டு விடயத்தையும் கவனித்தால் மாத்திரமே, புதிய கல்விச்சீர்திருத்தம் வெற்றியளிக்கும் என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

இதில் முதலாவதாகக் கூறப்பட்டது போதிய பௌதீக வளங்கள் வழங்கப்பட வேண்டுமென்று – அதாவது கற்பித்தல் சாதனங்கள், கருவிகள் (டின்ஸ்) கணினிகள், காட்சிப் பலகைகள், விளையாட்டு உபகரணங்கள், அடைக்கப்பட்ட வகுப்பறைகள், புத்தக மூலை, மணல் மூலை, குழுக் கற்றல் வசதிகள், தேடல்கள் ஊடான கற்றலுக்குரிய வசதி படைத்த நூல் நிலையங்கள், தொடர்பு சாதனங்கள் இப்படி பலவகைப்பட்ட பௌதீக வளங்கள் பரவலாக பாடசாலைகளுக்கு வழங்கப்பட வேண்டும் என்பதே யாகும்.

ஆனால், எமது தமிழ் கஷ்டப் பிரதேசப் பாடசாலைகளில் இருந்து எழுதக் கூட கதிரை மேசை இல்லாத நிலை உள்ளது. அடிப்படைப் பௌதீக வளங்களே இல்லாத எமது பிரதேசத்தில் எப்படி புதிய கல்விச் சீர்திருத்தம் வெற்றியளிக்கப் போகிறது? இது ஒரு புறம் இருக்க –

இரண்டாவதாக ஆய்வில் கூறப்பட்டது – ஆசிரியர் பயிற்சி பெறாத எந்த ஒரு ஆசிரியரும் வகுப்பறைக்குள் பிரவேசிக்கக் கூடாது என்பதேயாகும்.

உண்மையிலே புதிய கல்விச் சீர்திருத்தத்தில் கூறப்பட்டதாவது – எந்த ஒரு மாணவனும் குறிப்பிட்ட தேர்ச்சி மட்டத்தையடைந்தே அடுத்த நிலைக்குச் செல்ல வேண்டும். அப்படியானால் தேர்ச்சி மட்டத்தையடைய வைப்பதற்கான பல வகையான நுட்ப முறைகள் ஆசிரிய கலாசாலைகளிலும், கல்வியியற் கல்லூரிகளிலும் பயிற்றப்படுகின்றது. இப்படியான இரண்டு அம்சத்திலும் அதிக கவனம் எடுக்காவிட்டால், புதிய கல்விச் சீர்திருத்தம் மாணவர்களுக்கு எதிர் காலத்தில் பாரிய அழிவை ஏற்படுத்தும் என்றே ஆய்வு கூறுகிறது.

இதில் முதலாவது விடயத்தை பூர்த்தி செய்யாத கல்வியமைச்சு – இப்போது ஆசிரியர்களைப் பயிற்றுவித்தல் என்கின்ற இரண்டாவது விடயத்திலும் அண்மைக்காலங்களில் மறைமுகமான சதிகளைச் செய்கிறது என்பதை ஆசிரிய கலாசாலைகள், கல்வியியற் கல்லூரிகளில் உள்வாங்கிய ஆசிரியர் தொகையின் அட்டவணையைக் கவனிப்பதன் ஊடாகப் புலனாகும்.

இதேநேரம் சனத்தொகை வளர்ச்சி வீதத்தால் மாணவர் தொகையானது அதிகரித்து வருகிறது. புதிய கல்வி முறைப்படி மட்டுப்படுத்தப்பட்ட மாணவர் தொகையே ஒரு ஆசிரியருக்கு வழங்கப்பட வேண்டும் என்கிற வரைமுறைகளும் உண்டு. இது இப்படி இருக்க, பாடசாலைகளில் நிவர்த்தி செய்யப்பட வேண்டிய ஆசிரியர் தொகை அதிகரித்து வருகிறது. இதனைத் தற்போது பெருந்தொகையான பட்டதாரி ஆசிரியர்களாலும், தகைமை காண் ஆசிரியர்களாலும் நிவர்த்தி செய்து வருகிறது கல்வியமைச்சு. இவர்கள் வகுப் பறைக்குள் பிரவேசிக்கும் போது, புதிய கல்விச் சீர்திருத்தம் பற்றி எதுவித அறிவுமின்றி பிரவேசிக்கின்றனர். அதே வேளை மாணவர் தொகை வளர்ச்சி வீதமானது நிவர்த்தி செய்யப்பட வேண்டிய ஆசிரிய நியமன வளர்ச்சி வீதத்தோடு ஒப்பிடும் போது, மிகமோசமான குறைந்த நிலையில் கல்வியியற் கல்லூரிகளுக்கும் ஆசிரிய கலாசாலைகளுக்கும் உள் வாங்குகிறது. கல்வியமைச்சு இப்படியே யாருக்கும் வெளிப்படையாகத் தெரியாத சில மறைமுக சதிகளால் எதிர்காலத்தில் மாணவர்களது கல்விநிலை புதிய கல்விச் சீர்திருத்தம் என்கின்ற பெயரில் படுபாதாளத்திற்குப் போவது திண்ணம்.

**ஆசிரியர் கலாசாலை பலாலி–**

| பாட நெறி | புதிய அனுமதிகள் | |
|---|---|---|
| | 2000/2001 | 2001/2002 |
| 1. கணிதம் | 31 | 31 |
| 2. வர்த்தகம் | 31 | 23 |
| 3. உடற்கல்வி | 05 | 05 |
| 4. விஞ்ஞானம் | 47 | 25 |
| 5. ஆங்கிலம் | 10 | 37 |
| 6 . விவசாயம் | 13 | 20 |
| 7. றோமன் கத்தோலிக்கம் | 09 | 46 |

**ஆசிரியர் கலாசாலை கோப்பாய் -**

| பாட நெறி | புதிய அனுமதிகள் | |
|---|---|---|
| | 2000/2001 | 2001/2002 |
| 1. ஆரம்பக் கல்வி | 132 | 322 |
| 2. தமிழ் | 46 | 83 |
| 3. இந்து சமயம் | 1 9 | 38 |
| 4. சித்திரம் | 01 | 26 |
| 5. சங்கீதம் | 03 | 25 |
| 6. நடனம் | 03 | 12 |
| 7. மனையியல் | 04 | 13 |

**யாழ்.தேசிய கல்வியியல் கல்லூரி — யாழ் மாவட்டம் — 2001**

| இல | பாட நெறி | மாணவர்களின் எண்ணிக்கை | | | புதிய அனுமதிகள் | |
|---|---|---|---|---|---|---|
| | | 1999/2000 | 2000/2001 | 2001/2002 | 2000/2001 | 2001/2002 |
| 1. | ஆரம்பக் கல்வி | 25 | 64 | 100 | 39 | 40 |
| 2. | விஞ்ஞானம் | 27 | 57 | 57 | 30 | 40 |
| 3. | கணிதம் | 06 | 40 | 80 | 34 | 40 |
| 4. | சித்திரம் | 01 | 03 | 18 | 02 | 15 |
| 5. | சங்கீதம் | 05 | 14 | 34 | 09 | 20 |
| 6. | நடனம் | 03 | 09 | 24 | 06 | 15 |
| 7. | ஆங்கிலம் | - | 04 | 14 | 04 | 10 |
| 8. | நூலகமும், தகவல் தொழில்நுட்பமும் | - | 10 | 28 | 10 | 20 |
| | மொத்தம் | **67** | **201** | **395** | **134** | **200** |

# மரண ஊர்வலத்தில் தாக்குதல் ஈராக்கில் 30 பேர் உயிரிழப்பு!



(பாக்தாத்)

ஈராக்கின் மொசூல் நகரில் குர்திஷ் இன முஸ்லிம்களின் மரண ஊர்வலத்தின்மீது கிளர்ச்சிவாதிகள் நடத்திய கார்க்குண்டுத் தற்கொலைத் தாக்குதலில் 30 பேர் உயிரிழந்ததுடன், மேலும் 50 இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர்.

ஈராக்கின் மொசூல் நகரில் குர்திஷ் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த சயீத் வகாப் என்ற அதிகாரி கிளர்ச்சிவாதிகளால் சுட்டுக்கொல்லப்பட்டார். இவரது இறுதி ஊர்வலம் நேற்று முன்தினம் நடந்தவேளையே இந்தக் கார்க்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, பாக்தாத்தில் இடம்பெற்ற மற்றொரு தாக்குதலில் ஐந்து பொலிஸாரும், நான்கு பொதுமக்களும் கொல்லப்பட்டனர்.

இதனைவிட பிரிட்டன் பிரஜை மார்க்கிரட் ஹசனை ஈராக்கில் பணிபுரிந்தவேளை கடத்திப் படுகொலை செய்தவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் பலரைத் தாம் கைதுசெய்துள்ளதாக ஈராக் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஈராக்கில் கடந்த நான்கு நாட்களாகத் தொடர்ந்து இடம்பெற்றுவரும் தாக்குதல் சம்பவங்களிலும், 23 கார்க்குண்டுத் தாக்குதல்களிலும், 125 இற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளதாகவும் பெருமளவானோர் காயமடைந்துள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# ஈராக் கிளர்ச்சிவாதிகளால் அவுஸ்ரேலிய அதிகாரி கடத்தல்



ஈராக்கில் வெளிநாட்டவர்களைக் கிளர்ச்சிவாதிகள் கடத்திச்சென்று படுகொலை செய்வது தொடர்கதையாக நடைபெற்றுவருகிறது. தற்போது அவுஸ்ரேலிய அதிகாரி ஒருவரை கிளர்ச்சிவாதிகள் கடத்திச் சென்றுள்ளனர். அவரது பெயர் டக்ளஸ் உட் (வயது 63). கடந்த ஒரு ஆண்டுக்கு முன் இவர் ஈராக் சென்று மறுசீரமைப்புப் பணிகளைக் கவனித்து வந்தார்.

அவரைத் கிளர்ச்சிவாதிகள் கடத்திச்சென்றுவிட்டனர். அவரது படத்தைத் கிளர்ச்சிவாதிகள் ஏ.பி.தொலைக்காட்சியில் ஒளிபரப்பியுள்ளனர். அந்த அதிகாரியின் அருகில் முகமூடியணிந்த 2 கிளர்ச்சிவாதிகள் நிற்பதுபோலவும் படத்தில் உள்ளது.

அந்தப் பணயக் கைதி - அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ், அவுஸ்ரேலிய பிரதமர் ஜோன் ஹாவாட், கலிபோர்னியா ஆளுனரும், நடிகருமான ஆனல்ட் ஆகியோருக்கு உருக்கமான வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அதில் அதிகாரி கூறியிருப்பதாவது -

என் உயிரைக் காப்பாற்றுங்கள். ஈராக்கிலிருந்து அமெரிக்கப் படைகளும், மற்றைய நாட்டுப் படைகளும் வாபஸ் பெற உத்தரவிடுங்கள். அப்போதுதான் என் தலை தப்பும் எனத் தெரிவித்துள்ளார்.

# ஜப்பான் பட்டத்து இளவரசி பொது நிகழ்வில் பங்கேற்பு

(டோக்கியோ)

ஜப்பானிய பட்டத்து இளவரசி மசாகோ நீண்டகாலத்துக்குப் பின்னர் முதன்முதலாக தன் கணவருடன் பொது விழாவில் கலந்துகொண்டார்.

ஒரு வருடத்துக்கும் மேலாக வெளி உலகில் தலைகாட்டாமல் தனிமையில் வாழ்ந்த மசாகோ கடந்த ஜனவரி 2 ஆம் திகதி அரண்மனை பல்கனியில் தோன்றி பொதுமக்களுக்கு வாழ்த்துக் கூறினார்.

முன்னாள் தூதரக அதிகாரியும் - ஹவாட் பல்கலைக்கழக பட்டதாரியுமான மசாகோ 1993 ஆம் ஆண்டு இளவரசர் நாருஹிட்டோவைத் திருமணம் செய்துகொண்டார். அரண்மனையில் புழமையான வாழ்க்கை முறையுடன் ஒத்திசைந்து வாழ்வது அவருக்குக் கடினமாக உள்ளது.

அத்தோடு அவருக்குப் பெண் குழந்தை மட்டுமே உள்ளது. ஆணுக்குத்தான் வாரிசுரிமை உண்டு. இதனாலும் அவர் மனம் ஒடிந்து போயிருந்தார்.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் ஐ.நா சபையின் சிறுவர் நல அமைப்புக்கான விழாவில் இளவரசி கணவருடன் கலந்துகொண்டார்.




# பிரிட்டனில் நாடாளுமன்ற தேர்தல்; மீண்டும் பிரதமராவாராம் பிளேயர்!

## கருத்துக் கணிப்புகள் தெரிவிப்பு



(லண்டன்)

பிரிட்டிஷ் பிரதமராக 3 ஆவது முறையாக ரொனி பிளேயர் தேர்ந்தெடுக்கப்படுவார் என்று சண்டே ரைம்ஸ் நாளேடும், யூகௌவ் நிறுவனமும் இணைந்து நடத்திய கருத்துக் கணிப்பில் தெரியவந்துள்ளது.

இது குறித்து சண்டே ரைம்ஸ் நாளேட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

659 உறுப்பினரைக்கொண்ட பிரிட்டன் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையைவிட 90 முதல் 100 வரை அதிக இடங்களைக் கைப்பற்றி பிளேயர் மீண்டும் பிரதமராவார்.

ரொனி பிளேயரின் தொழிலாளர் கட்சிக்கு 37 சதவீதமும், கொன்சர்வேட்டிக் கட்சிக்கு 34 சதவீதமும், லிபரல் ஜனநாயகக் கட்சிக்கு 21 சதவீத வாக்குகளும் கிடைக்கும்.

இது தொடர்பான ஆய்வை பிளைமௌத் பல்கலையின் தேர்தல் மையத்தின் பேராசிரியர்கள் கொலின் ரேலிங்ஸ் - மைக்கல் திராஷர் ஆகியோர் நடத்தினர். தேசிய அளவில் பிளேயரின் கட்சிக்கு ஆதரவாக வீசிவரும் அலையால் 96 இடங்கள் பெரும்பான்மை கிடைக்கும்.

இந்த நிலையில் நாளை மறுதினம் பிரிட்டனின் தேர்தல் நடைபெறுகின்றது. தேர்தல் முடிவு வெளியாகி தனது கட்சி வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டால், மறுநாளே அமைச்சரவையில் மாற்றம் செய்ய பிளேயர் திட்டமிட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# சதாமை இரகசியமாகச் சந்தித்த அமெரிக்க பாதுகாப்புச் செயலர்!



அமெரிக்க பாதுகாப்புச் செயலர் ரம்ஸ்பீல்ட் ஈராக் சென்று சிறையில் இருக்கும் சதாம் ஹூசைனை ரகசியமாகச் சந்தித்து கிளர்ச்சிவாதிகளின் தாக்குதலை நிறுத்த உதவினால் அவரை விடுதலை செய்யத் தயார் என்று பேச்சு நடத்தியுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஈராக்கில் சதாம் ஆட்சியிலிருந்து அகற்றப்பட்ட பின்னரும் அமெரிக்க இராணுவத்துக்கு எதிரான வன்முறை குறையவில்லை. தேர்தல் நடத்தி ஆட்சி அதிகாரத்தை ஈராக்கியர்களிடம் ஒப்படைத்த பிறகும் கிளர்ச்சிவாதிகளின் தாக்குதல் குறையவில்லை. ஈராக் கிளர்ச்சிவாதிகளின் தாக்குதல்களை நிறுத்துவதற்கு வழி தெரியாமல் அமெரிக்கா நெருக்கடியில் உள்ளது.

இந்த நிலையில் சிறையில் இருக்கும் சதாம் ஹூசைனுடன் பேரம் பேசுவது என்று அமெரிக்கா தீர்மானித்தது. இதற்காக அமெரிக்க பாதுகாப்புச் செயலர் டொனால்ட் ரம்ஸ்பீல்ட் 2 வாரங்களுக்கு முன்பு ஈராக் சென்றார். அமெரிக்க இராணுவ முகாமில் உள்ள சிறையில் அடைக்கப்பட்டுள்ள சதாம் ஹூசைனை அவர் ரகசியமாகச் சந்தித்தார்.

அப்போது அவர் கிளர்ச்சிவாதிகள் அமெரிக்க இராணுவத்துடன் போர் நிறுத்தம் செய்துகொள்ள தொலைக்காட்சிமூலம் வேண்டுகோள் விடுக்க வேண்டும். அப்படிச் செய்தால் உங்களை விடுதலை செய்யவும் - பொது வாழ்க்கையில் ஈடுபட அனுமதிக்கவும் செய்வோம் என்றார்.



இதற்குச் சதாம் ஹூசைன் சம்மதிக்கவில்லை. இந்தப் பேரத்தை உதறித் தள்ளினார். இந்தப் பேர விவகாரம் ஜோர்தானில் உள்ள ஒரு சில ஈராக் அதிகாரிகளுக்கு மட்டும் தெரியும் என்று கூறப்படுகிறது.

அதன்பிறகு கிளர்ச்சிவாதிகளிடமே நேரடியாகப் பேரம் பேசவும் அமெரிக்கா முயன்றது. தாக்குதலை நிறுத்திக்கொண்டால் சதாமுக்குக் குறைந்தபட்ச தண்டனை வழங்கப்படும் என்றும் தெரிவித்துள்ளது.

# 21 ஆம் நூற்றாண்டு சவாலை சமாளிக்க ஐ.நா.வை நவீனமயப்படுத்தவேண்டும்!

## அமெரிக்க வெளியுறவுச் செயலர் தெரிவிப்பு



(வொஷிங்ரன்)

ஐ.நா.பாதுகாப்பு சபையில் இப்போது 5 நிரந்தர உறுப்பு நாடுகளாக- அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ், சீனா, ரஷ்யா ஆகியவை உள்ளன.

பாதுகாப்புச் சபையின் பலம் அதிகரிக்கப்படவேண்டும்என்றகோரிக்கை வலுத்துவருகிறது. அவ்வாறு எண்ணிக்கையை உயர்த்தும்போது தமக்கு இடம்வேண்டும் என்று இந்தியா கோரியுள்ளது. இந்தியாவுக்கு நிரந்தர உறுப்பினர் பதவி தர பல்வேறு நாடுகளும் ஆதரவளித்துள்ளன.

இந்தியா தவிர பிரேசில், ஜப்பான், தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளும் நிரந்தர உறுப்பினர் பதவி கோரியுள்ளன.

இந்த நிலையில் பாதுகாப்புச் சபையை விரிவுபடுத்துவது குறித்து அமெரிக்க வெளியுறவுச் செயலர் கொண்டோலீசா ரைஸ் பிரேசில் நாட்டுப் பத்திரிகை ஒன்றுக்குப் பேட்டியளித்தார்.

அதில் அவர் கூறியிருப்பதாவது -

ஐ.நா பாதுகாப்புச் சபையை விரிவுபடுத்துவது குறித்து நாங்கள் பரிசீலித்து வருகிறோம். இதில் இந்தியா இடம்பெறுவது குறித்து எங்களுக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. பாதுகாப்புச்சபை விரிவுபடுத்தப்பட்டால் அது பலவீனமாகிவிடும் என்று நாங்கள் நினைக்கவில்லை.

21 ஆம் நூற்றாண்டுக்கான பிரச்சினைகளைச் சமாளிக்கும் விதத்தில் ஐ.நா நவீனமயப்படுத்தப்படவேண்டும். இந்தியா, பிரேசில், தென்னாபிரிக்கா ஆகிய நாடுகள் உலக சக்திகளாக உருவாகியுள்ளன. அவை ஐ.நா. பாதுகாப்புச் சபையில் இடம்பெறுவதைப் பார்த்து நாங்கள் அஞ்சவில்லை.

அந்த நாடுகளும் எங்களைப் போல ஜனநாயக நாடுகள்தான். அதனால் அவை நிரந்தர உறுப்பினர்களாவது நல்லதுதான் எனத் தெரிவித்தார்.

# வீட்டுக் காவலில் வைக்கப்பட்டிருந்த நேபாள கம்யூனிஸ தலைவர் விடுதலை



(காத்மண்டு)

நேபாளத்தில் கடந்த மூன்று மாதகாலமாக வீட்டுக் காவலில் வைக்கப்பட்டிருந்த கம்யூனிஸ கட்சித் தலைவர் மத்காவ் குமார் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

நேபாள மன்னர் கயனேந்திராவால் மூன்று மாதங்களுக்கு முன்னர் அவசர காலநிலை பிரகடனப்படுத்தப்பட்டவேளை இவர் உட்பட பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள் கைதுசெய்யப்பட்டனர். இந்த நிலையில் மன்னர் கயனேந்திரா தற்போது அவசரகால நிலையை நீக்கியதனை அடுத்து இவர் விடுதலை செய்யப்பட்டார்.

எனினும், நேபாள காங்கிரஸ் தலைவர் ராம்சந்திரா, நேபாள மாக்ஸிய லெனினிய கட்சித் தலைவர் இஸ்வார் பொக்காரல் உட்பட பல அரசியல் கட்சித் தலைவர்களையும் அவர்களது ஆதரவாளர்களையும் விடுதலைசெய்ய நேபாள அதிகாரிகள் மறுத்துள்ளனர்.

அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டாலும் எந்தவொரு சுதந்திரமும் வழங்கப்படவில்லை என்பதனையே, இவர்கள் விடுதலை செய்யப்படாமை எடுத்துக்காட்டுவதாக நேபாள காங்கிரஸ் கட்சியின் பேச்சாளர் பசந்தா கௌதம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நேபாளத்தில் விரைவாக ஜனநாயகத்தை ஏற்படுத்தக் கோரியும், சிறையிலுள்ள அனைத்து அரசியல் கைதிகளையும் விடுதலை செய்யக் கோரியும் நேற்று முன்தினம் நேபாளத்தில் ஆயிரக்கணக்கில் திரண்ட மக்கள் ஆர்ப்பாட்டத்தை நடாத்தியுள்ளனர். அவசர காலநிலை நேபாளத்தில் நீக்கப்பட்டதனை இந்தியா வரவேற்றுள்ளது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
*The Leading Daily of Tamils' Homeland*

# 'மாமனிதர்' சிவராம் குறித்து எழுதவேண்டிய சூழ்நிலைக்குள் இனவாத ஊடகவியலாளர்கள்

## அஞ்சலி நிகழ்வில் வே.பாலகுமாரன் தெரிவிப்பு

## ஆயுதக்குழுவுடன் தொடர்புடைய இருவர்மீது துப்பாக்கிச் சூடு!

பொலனறுவ - வெலிக்கந்த பிரதேசத்திலுள்ள குடாப்பொக்கணையில் நேற்றுமுற்பகல் ஆயுதக்குழுவொன்றுடன் தொடர்புடையவர்கள் எனக்கருதப்படும் இளைஞர் ஒருவரும் அவரது தந்தையும் இனந்தெரியாத நபர்களால் சுடப்பட்டுக் காயமடைந்துள்ளனர்.

முத்தையா ஆறுமுகம் (வயது 55), அவரது மகன் தவலோகராசா (வயது 25) ஆகிய இருவருமே காயமடைந்த நிலையில் பொலனறுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

குறிப்பிட்ட இளைஞர் ஏற்கனவே ஆயுதக்குழுவொன்றிலிருந்து விலகியதாக வெலிக்கந்த பொலிஸார் தெரிவித்தனர். இருவரும் தமது தோட்டத்தில் வழமையான பயிர்ச்செய்கை நடவடிக்கையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தவேளையே இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

## அரசு - புலிகள்

உடன்படிக்கையை சரியாக பேணி வருகின்றனர் எனக் கூறமுடியும்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு இரண்டு தரப்பினரிடையேயும் போர்நிறுத்த உடன்படிக்கையை பாதுகாக்கத் தமது ஒத்துழைப்பை வழங்கி வருகின்றது. போர் நிறுத்தம் நிறைவடைந்து விட்டதெனக் கூற எமக்கு எவ்வித உரிமையுமில்லை. இதற்கான பொறுப்பு எமக்கு இல்லை. இந்தப் பொறுப்பு குறிப்பிட்ட தரப்பினருக்கே உள்ளது.

நீண்ட காலமாக இரண்டு தரப்பினரும் போர் நிறுத்த உடன்படிக்கையை பாதுகாத்து வருகின்றனர். இது சிறந்த ஒரு நிலைமையாகும். இந்தச் சூழலில் மீண்டுமொரு யுத்தமொன்றுக்கு செல்லவேண்டிய தேவை இருப்பதாக நான் கருதவில்லையென அவர் மேலும் தெரிவித்தார்.

## இந்திய..

ஒப்பந்தம் ஒன்றை உருவாக்குவது குறித்த முக்கிய விடயங்கள் ஆராயப் பட்டன.

இதேவேளை - இந்த ஒப்பந்தம் தொடர்பான திட்டவரைபினை இரண்டு நாட்டு அரசாங்கங்களும் ஏற்றுக்கொண்டுள்ளதாகவும் இதனடிப்படையில் இராணுவ ஒத்துழைப்பு பயிற்சி மற்றும் புலனாய்வுத் தகவல் பரிமாற்றம் கடல் வலய கூட்டுப் பாதுகாப்பு போன்ற விடயங்களில இரு நாட்டு இராணுவம் மற்றும் கடற்படையினர் இணைந்து செயற்படுவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் இலங்கை வெளிவிவகார அமைச்சுத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

## கேணல்...

சொர்ணத்தை தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், வடபோர் முனைக் கட்டளைத் தளபதி கேணல் தீபன், குட்டிசிறி மோட்டார்படையணித் தளபதி கோபால் ஆகியோர் வரவேற்று அழைத்துச் சென்றனர்.

கேணல் சொர்ணத்தின் கிளிநொச்சிக்கான பயணம் வழமையானதெனத் தெரிவிக்கப்படுகிறது.

## பொதுக் கட்டமைப்பு...

கட்டமைப்பு ஏற்படுத்தப்படுவதில் தாமதமடைந்துவருவது குறித்து உதவி வழங்கும் நாடுகளின் அதிகாரி ஒருவர் இது குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில் -

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளை வழங்கும் வகையில் ஏற்படுத்தப்படவுள்ள பொதுக் கட்டமைப்புக்கு தென்பகுதியில் கட்சிகளிடையே ஏற்பட்டுள்ள கடும் எதிர்ப்பால் இந்தக் கட்டமைப்பு ஏற்படுத்தப்படுவதற்கான வாய்ப்புகள் குறைவாகவே உள்ளன. இது கவலையளிக்கும் ஒரு விடயமாக உள்ளதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை எதிர்வரும் 16, 17 ஆம் திகதிகளில் கண்டியில் நடைபெறவுள்ள உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்துக்கு முன்னர் பொதுக் கட்டமைப்பை ஏற்படுத்துவதற்காக உறுதியான முடிவை அரசாங்கத்திடமிருந்து பெறுவதற்காக சர்வதேச முயற்சிகள் அடுத்தவாரம் முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன்படி எதிர்வரும் 6 ஆம் திகதி நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் கொழும்பு வரவுள்ளதாகவும், இவரைத் தொடர்ந்து 8 ஆம் திகதி ஜப்பானின் விசேட சமாதானத் தூதுவர் யசூசி அகாஷியும் கொழும்பு வரவுள்ளதாகவும் இவர்கள் இருவரும் அரச உயர் அதிகாரிகளைச் சந்தித்து பொதுக் கட்டமைப்பை ஏற்படுத்துவதற்காக அரசின் முடிவை பெறுவதற்கான முயற்சிகளில் ஈடுபடுவார்களெனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.



(கிளிநொச்சி)

இனவாதம் பேசிய ஊடகவியலாளர்கள், தராக்கி பற்றி எழுதவேண்டிய கட்டாயத்துக்கு - தவிர்க்கமுடியாத நிர்ப்பந்தத்துக்குத் தள்ளப்பட்டுள்ளனர். தராக்கியின் சாவோடு செத்த தர்க்கம், நீதி, நியாயம், மனிதநேயம், அறிவு, துணிவு என்பன தொடர்பாக நாங்கள் சொல்லவேண்டிய செய்தியை இனவாதப் பத்திரிகையாளர்கள் சொல்லி விட்டார்கள்.

அந்தளவுக்கு தராக்கி - இனவாதம் கக்குகின்ற ஊடகவியலாளர்களுக்கும் எதிரிக்கும் நண்பனாக இருந்து கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார். இவரது சாவு மூலம் சிங்கள தேசம் வலுவிழந்து நிற்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் க.வே.பாலகுமாரன் தெரிவித்தார்.

நேற்று கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நடைபெற்ற மாமனிதர் சிவராமின் இறுதி வணக்க நிகழ்விலும் கண்டனக் கூட்டத்திலும் கலந்துகொண்டு நினைவுரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

முன்னதாக நிதர்சனம் நிறுவனத்தின் இயக்குநர் கருணாகரன் தலைமையில் நேற்றுப் பிற்பகல் 4 மணிக்கு இடம்பெற்ற அஞ்சலி நிகழ்வில் பொதுச் சுடரை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சிவனாத்தும் , மாமனிதர் சிவராமின் திருவுருவப்படத்துக்கான ஈகச் சுடரை ஈழநாதம் பிரதம ஆசிரியர் இ.ஜெயராஜும் ஏற்றிவைத்தனர்.

திருவுருவப் படத்துக்கான மலர் மாலையை தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன். தியாகம் அணிவித்தார். தொடர்ந்து நிகழ்வின் நினைவுரையை விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே. பாலகுமாரன், அரசியல் ஆய்வாளர் மு.திருநாவுக்கரசு, எழுத்தாளர் நிலாந்தன், புலிகளின் குரல் பிரதம செய்தி ஆசிரியர் தி.தவபாலன் ஆகியோர் நிகழ்த்தினர்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுயில் -

மாமனிதர் சிவராமின் சாவோடு சர்வதேச சமூகத்தின் முன்னால் தலை நிமிர்ந்து எந்தவொரு கருத்தையும் சொல்வதற்கான ஒட்டுமொத்த வாய்ப்பையும் அரசு இழந்துவிட்டது.

உண்மையை எப்பொழுதும் நாங்கள் புறந்தள்ளிவிடமுடியாது. இன்று சிங்கள தேசத்தின் பொய்மை - அந்தப் பொய்மைக்குள்ளே வாழ்ந்து, பொய்மையாகவே நினைத்து, பொய்மையான முடிவுகள் எடுக்கப்படக்கூடிய சுழ்நிலை சிவராமின் சாவின் காரணமாக உருவாக்கப்பட்டுள்ளது.

நியாயமான, தர்க்கரீதியான வாய்ப்புக்களை சிங்கள தேசம் இழந்துள்ளது. உண்மையில் இந்தச் சாவுக்கு வேதனைப்பட வேண்டியவர்கள் சிங்களவர்கள்தான் என்பது உண்மையான செய்தியாகும்.

விடுதலைப் போராட்டத்தின் உண்மையான நிலையை எடுத்துரைப்பதற்கு - சரியான, தகுந்த, நேர்த்தியான முடிவுக்கு சிங்கள தேசம் வருவதற்கான ஒரேயோரு வாய்ப்பு சிவராமின் சாவுக்கூடாக இருக்கிறது.

சிவராமின் சாவு எமது விடுதலைப் போராட்டத்தின் அடுத்த கட்டப் பாய்ச்சலுக்கு எத்தகைய உரத்தைக் கொடுக்கப் போகிறது என்பதை நாங்கள் எல்லோரும் காணப்போகிறோம் எனத் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் ஊடகவியலாளர்கள், எழுத்தாளர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

## இந்திய வெளியுறவு...

துணைத் தூதுவர் மேகாகன் குமார் உட்பட இந்திய தூதரகத்தின் முக்கிய அதிகாரிகள் கலந்துகொண்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சந்திப்பில் சமாதானப் பேச்சுக்களில் ஏற்பட்டுள்ள தேக்க நிலை மற்றும் பொதுக் கட்டமைப்பை உருவாக்குவதற்கு அரசாங்கம் தயக்கம் காட்டி வருவது தொடர்பாகவும் தமிழ் கூட்டமைப்பினரால் சியாம் சரனுக்கு எடுத்து விளக்கப்பட்டது.

இங்கு கருத்து வெளியிட்ட இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் இலங்கையில் உள்ள தமிழ் மக்கள் தொடர்பில் இந்தியா கூடுதல் அக்கறை கொண்டுள்ளதாக தெரிவித்தார்.

## சுனாமி...

இந்த வெள்ளைக்காரருடன் பேச்சு நடத்தினால் நாட்டை இரண்டாக பிரிக்க முடியுமே தவிர, சமாதானத்தை ஏற்படுத்த முடியாது. தனது நாட்டில் தோற்றுப்போன சொல்ஹெய்ம் எப்படி எமது நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த முடியும்.

வெளிநாடுகள் மூலமாகவோ அல்லது இலங்கையிலுள்ள உள்நாட்டு நிதியைக் கொண்டோ - சட்டவிரோத அமைப்பொன்றுடன் இணைந்து செயற்திட்டங்களை மேற்கொள்ள நாம் அனுமதியளிக்க மாட்டோம். இவ்வாறான செயற்பாட்டை முற்றாக எதிர்க்கிறோம்.

ஜே.வி.பி. மக்கள் நன்மைக்காகவே சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து அரசாங்கம் ஒன்றை அமைத்தது. இந்தக் கூட்டமைப்பு அரசாங்கத்தை உடைப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சி முயற்சிக்கின்றது எனத் தெரிவித்தார்.

## தமிழர் புனர்வாழ்வுக்கழக இயக்குனர் பொலிஸாரால் கைது

(மன்னார்)

மன்னார் உயிலங்குளம் சோதனைச் சாவடியில் வைத்து தமிழர் புனர்வாழ்வுக்கழக இயக்குனர் ஜோய் பிரான்க்கும் அவரது சாரதியும் நேற்று இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பின்னர் இவர்கள் மன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். கைது செய்யப்படும்போது இவர்களிடம் 1 கோடியே 88 லட்சத்து 29 ஆயிரம் ரூபா பணம் இருந்துள்ளது.

இந்தளவு பணம் எதற்காகக் கொண்டுசெல்லப்படுகிறது என பொலிஸார் கேட்டதற்கு புனர்வாழ்வுக் கழக கிளைகளுக்குப் பகிர்ந்தளிக்கப்படுவதற்காகக் கொண்டு செல்லப்படுவதாக ஜோய் பிரான்க் தெரிவித்துள்ளார்.

ஜோய் பிரான்க் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தைச் சேர்ந்தவர்தான் என்பதை உறுதிப்படுத்துமாறு பொலிஸார் அவரைக் கேட்டுள்ளனர். பின்னர் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் இவர் குறித்து உறுதிப்படுத்தி தொலைநகல் அனுப்பியுள்ளனர்.

எனினும் மன்னார் பொலிஸார் அதனை ஏற்றுக்கொள்ள மறுத்துள்ளதுடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவரை வந்து வாக்குமூலம் தருமாறு கூறியுள்ளனர்.

## மாமனிதர் சிவராம் புகழுடல்...

விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினரால் புகழுடல் பொறுப்பேற்கப்பட்டு வவுணதீவு பாலமூடாக கரடியனாற்றுக்கு எடுத்துச்செல்லப்பட்டு தேனகத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. அன்னாரின் இல்லத்திலிருந்து இராணுவக் கட்டுப்பாட்டுக்குட்பட்ட வவுணதீவு முன்னணி காவல் நிலைப் பிரதேசம்வரை பொலிஸ், விசேட அதிரடிப்படை மற்றும் இராணுவப் பாதுகாப்பு வழங்கப்பட்டது.

தேனகத்தில் வைக்கப்பட்டிருந்த புகழுடலுக்கு தமிழீழத் தேசியக் கொடியை விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி கேணல் பானு போர்த்தினார். தமிழீழத் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனால் வழங்கப்பட்ட மாமனிதர் கௌரவ விருதுப் பத்திரத்தை கேணல் பானு வாசித்து குடும்பத்தினரிடம் கையளித்தார்.

இந்த அஞ்சலி நிகழ்வில் விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன், அரசயிற்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழினி, விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா, மட்டக்களப்பு மாவட்ட தளபதி ராம், மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளந்திரையன் உட்பட விடுதலைப் புலிகளின் தளபதிகள், போராளிகள் மற்றும் பொதுமக்கள் என ஏராளமானோர் தமது அஞ்சலியைச் செலுத்தினர்.

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளந்திரையன், நிதர்சனம் பொறுப்பாளர் சேரலாதன், மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழினி, முஸ்லிம் காங்கிரஸ் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் மர்சூக் அகமட் லெப்பை ஆகியோர் அஞ்சலியுரை ஆற்றினார்கள்.

இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பிராந்திய ஊடகவியலாளர்கள் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

பிற்பகல் அங்கிருந்து மட்டக்களப்பு நகரிலுள்ள அன்னாரின் பிறந்த வீட்டுக்குப் புகழுடல் எடுத்துச் செல்லப்பட்டு ஒரு மணிநேரம் பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

வவுணதீவு இராணுவ முன்னணி காவல் நிலையப் பிரதேசத்திலிருந்து புகழுடலை வாசகர் வட்டத்தினர் பொறுப்பேற்று அன்னாரின் இல்லத்துக்கு எடுத்துச் சென்றனர். அங்கு வாசகர் வட்டத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற அஞசலிக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான பி.அரியனேந்திரன், எஸ்.ஜெயானந்தமூர்த்தி, செல்வம் அடைக்கலநாதன், எம்.கே.சிவாஜிலிங்கம், பி. சந்திரசேகரன், எஸ்.சிவனேசன், ஆகியோரும் சுதந்திர ஊடக இயக்கத் தலைவர் சுனந்த தேசப்பிரிய உட்பட தமிழ், சிங்கள , முஸ்லிம் ஊடகவியலாளர்களும், எழுத்தாளர்களும் உரையாற்றினார்கள்.

இதன்பின்பு அங்கிருந்து புகழுடல் ஆலையடிச்சோலை மயானத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டு நல்லடக்கம் செய்யப்பட்டது.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் புகழுடல் எடுத்துச்செல்லப்பட்ட வீதிகளிலும் வைக்கப்பட்டிருந்த வீட்டைச் சுற்றியும் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

மாமனிதர் சிவராமின் இறுதிநாள் நிகழ்வையொட்டி நேற்யைதினம் மட்டக்களப்பில் பூரண துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டது. வியாபார நிலையங்கள், அரச திணைக்களங்கள் மற்றும் பாடசாலைகள் என்பன இயங்கவில்லை வீதிகள்தோறும் கறுப்புக்கொடிகளும் பறக்கவிடப்பட்டிருந்தன.

**சிறுவர் அரங்கப் பயிற்சிப் பிரிவு ஆரம்பம்**

**செயல்திறன் அரங்க இயக்கம்**
Active Theatre Movement

புதிதாக ஆரம்பிக்கவுள்ள சிறுவர் அரங்கப் பயிற்சியில் பங்குபற்ற விரும்புபவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பயிற்சிக்காலம் - 04 மாதங்கள் (கிழமை நாட்களில் விரிவுரைகள் நடைபெறும்)

பயிற்றுவிப்பாளர் - **கலாநிதி குழந்தை ம.சண்முகலிங்கம்**

பயிற்சிமுடிவில் சிறப்பாகத் தேர்ச்சி பெறுவோர் தொழில்சார் ஆற்றுகையாளராக இணைத்துக் கொள்ளப்படுவர்.

**பாடவிதானம்**
சிறுவர் நாடக எழுத்துருப்படைப்பாக்கம்
நடிகருக்கான அடிப்படைப் பயிற்சி
சிறுவர் நாடகத் தயாரிப்பு

**எதிர்பார்க்கப்படும் தகுதி**
க.பொ.த. (உ/த) சித்தியடைந்திருத்தல் வேண்டும்
வயதெல்லை 18 - 35
நாடகமும் அரங்கியலும் பாடத்தில் சித்தி,
அனுபவம் விஷேட தகுதிகளாகக் கருதப்படும்

விண்ணப்ப முடிவு திகதி 10.05.2005
விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி -

*செயல்திறன் அரங்க இயக்கம்*
**Active Theatre Movement**
*'அருளகம்' ஆடியபாதம் வீதி,*
*திருநெல்வேலி.*

(சி-4104)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 03.05.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.